வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 07.10.2024 திங்கட்கிழமை இதழ் : 281 பக்கங்கள் : 12

தமிழ் அரசின் வேட்பாளர் பட்டியல்:

## யாழ்ப்பாணத்தில் இறுதியானது; மட்டு., வன்னியில் இழுபறி நிலை

வவுனியா, ஒக். 07

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர் பட்டியல் இறுதியாகியுள்ளது. வன்னி மாவட்ட பட்டியல் இழுபறியாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர்களை தெரிவதற்கான நியமனக் குழு இரண்டாவது நாளாக நேற்று ஞாயிற்றுக் கிழமை வவுனியாவில் கூடியது.

6 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட யாழ். தேர்தல் மாவட்டத்தில் 9 11

## தந்தை செல்வாவின் பேரனும் போட்டி!



வவுனியா, ஒக். 07

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் முன்னாள் தலைவர்களான தந்தை செல்வா - நாகநாதன் ஆகியோரின் பேரன் எஸ். சி.இளங்கோவன் யாழ்ப் பாணத்தில் போட்டியிடுகிறார். 11

## தமிழ் அரசிலிருந்து விலகினார் தவராசா

கொழும்பு, ஒக். 07

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அனைத்து பதவி மற்றும் பொறுப்புக்ளில் இருந்தும் தாம் விலகுகிறார் என்று ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசா அறிவித்துள்ளார்.

இதன்படி, இலங்கை தமிழ் அரசு கட்சியின் கொழும்பு கிளைத் தலைவர் பதவி, இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு தலைவர், மத்திய குழு உறுப்பினர் ஆகிய அனைத்துப் பொறுப்புகளையும் அவர் துறந்துள்ளார். 11

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி - நியாயம் கிடைக்கும்

## ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க

கொழும்பு, ஒக். 07

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்படும். அத்துடன், மீண்டும் அவ்வாறானதோர் அழிவுக்கு இடமளிக்காத வகையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியும் நியாயமும் நிலைநாட்டப்படும் - இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க உறுதியளித்துள்ளார்.**

கடந்த 2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தினத்தில் கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு என பல இடங்களில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதில், நீர்கொழும்பு - கட்டுவாப்பிட்டி சென். செபஸ்தியார் தேவாலயத்தில் நடந்த தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் காயமடைந்தவர்கள்,



பாதிக்கப்பட்டவர்களை ஜனாதிபதி அநுர நேற்று ஞாயிற்றுக்கிழமை சந்தித்தார்.

தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் நினைவாக தேவாலயத்தில் அமைக்கப்பட்ட தூபிக்கு மலர் தூவி அஞ்சலி 11

## தமிழ் அரசு, ஜ.த.தே. கூட்டணி திருமலையில் கூட்டாக போட்டி!

திருகோணமலை, ஒக். 07

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் இணைந்து போட்டியிடவுள்ளன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா, பொதுச் செயலாளர் ப. சத்தியலிங்கம், எம். ஏ. சுமந்திரன், சி. சிறீதரன், ச. குகதாசன் ஆகியோர் திருகோணமலை மாவட்ட ஆயர் நோயல் இம்மானுவல் ஆண்டகையை நேரில் 11

## அம்பாறையில் தமிழ் அரசு தனித்தே போட்டியிடும்!

கட்சியின் பேச்சாளர் அறிவிப்பு

குமார. கோகுலன்

வவுனியா, ஒக். 07

இலங்கை தமிழ் அரசுக் கட்சி அம்பாறை மாவட்டத்தில் தனித்தே போட்டியிடும் என்று அந்தக் கட்சியின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் அறிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கு தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர்களை தெரிவதற்கான நியமனக் குழு இரண்டாவது நாளாகவும் நேற்று ஞாயிற்றுக் கிழமை வவுனியாவில் கூடியது. 11

## தாக்குதல்தாரிகளை ஜனாதிபதி சட்டத்தின் முன்பாக நிறுத்துவார்!

கர்தினால் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, ஒக். 07

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபட்டவர்களை சட்டத்தின் முன்நிறுத்துவார் என்று நம்பிக்கை கொண்டுள்ளதாக பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் - காயமடைந்த - பாதிக்கப்பட்ட தரப்பினரை நீர்கொழும்பு - கட்டுவாப்பிட்டி 11

## உள்நாட்டு, வெளிநாட்டு காரணிகளே இலங்கை அரசியல் அதிர்ச்சிக்கு காரணம்!

இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 07

இரு வருடங்களுக்கு முன்னர் இலங்கை எதிர்கொண்ட அரசியல் அதிர்ச்சி நிலைக்கு உள்நாட்டு, வெளிநாட்டு காரணிகளே காரணம் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க புத்திஜீவிகள் அமைப்பான சர்வதேச அமைதிக்கான கார்னகி என்டொவ்மென்ட் அமைப்பின் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தில் 11



## உருளைக்கிழங்கு வெங்காயத்துக்கு வரி அதிகரிப்பு!

கொழும்பு, ஒக். 07

உருளைக்கிழங்கு, வெங்காயத்துக்கான இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு கிலோ உருளைக்கிழங்குக்கான வரி 10 ரூபாயாலும் ஒரு கிலோ வெங்காயத்துக்கான வரி 20 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய உருளைக்கிழங்கு மீதான விசேட இறக்குமதி வரி 50 ரூபாயில் இருந்து 60 ரூபாயாகவும் 11

## பொதுத் தேர்தலில் எந்த வகிபாகமும் கிடையாது

தமிழ் மக்கள் பொதுச் சபை

யாழ்ப்பாணம், ஒக். 07

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் பொதுச் சபை எந்வொரு வகிபாகத்தையும் எடுப்பதில்லை என்று தீர்மானித்துள்ளதாக அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

நேற்று அந்த அமைப்பு வெளியிட்ட 11

## தமிழ் அரசிலிருந்து சசிகலாவும் விலகுகிறார்

யாழ்ப்பாணம், ஒக். 07

இலங்கை தமிழ் அரசு கட்சியிலிருந்து சசிகலா ரவிராஜும் விலகவுள்ளார்.

இது தொடர்பில் 11

## சந்திரகுமாரின் கட்சி சஜித்தின் கூட்டணியில்!

கிளிநொச்சி, ஒக். 07

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் சந்திரகுமாரின் சமத்துவக் கட்சி ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணியில் இணைந்து போட்டியிடவுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை இந்தக் கட்சி ஆதரித்திருந்தது. 11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

கடந்த தேர்தலில் ஒரு புலம்பெயர் வர்த்தகர் நடத்திய 'வார்த்தைப் போர்' தான் சிறீதரனும் சுமந்திரனும் தேசியத் தலைவராகவும் மதுயுரைஞர் அன்ரன் பாலசிங்கமாகவும் மாறுவதற்கு காரணமானது என்பது பலருக்கு தெரியாத விடயம்.

ஒரு கட்டத்தில் இருவரும் இணைந்து பணியாற்றியதால் சுமந்திரன் இலாபம் அடைந்தாரா என்பது தெரியவில்லை. ஆனால், அது சிறீதரனுக்கு நட்டத்தையே ஏற்படுத்தியது.

இருவரும் அந்தத் தேர்தல் முடிவடைந்த பின்னர், கட்சித் தலைவர் பதவிக்காக மல்லுகட்டியதும் அதனால், தமிழ் அரசு கட்சியே நீதிமன்றப் படிக்கட்டில் ஏறியதும் பழைய சங்கதிகள். ஆனால், அந்தத் தேர்தலில் சிறீதரன் தனது ஆதரவை சுமந்திரனுக்கு வெளிப்படுத்தியதும் அவருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசிய புலம்பெயர் வர்த்தகர் ஒருவர், "நாங்கள் சுமந்திரனை தோற்கடிப்பதற்காக முழுவீச்சில் இறங்கியிருக்கிறோம். நீங்கள் அவரை ஆதரித்தால், உங்களையும் தோற்கடிக்க வேண்டியிருக்கும்?" என்று எச்சரிக்கை விடுக்கப்போய், அதனாலேயே அவரை அன்ரன் பாலசிங்கம் 'றேஞ்சுக்கு' சிறீதரன் உயர்த்த வேண்டியதாயிற்று.

இவையெல்லாம் பழைய சங்கதிகள்தான். ஆனால், சுமந்திரனை வீழ்த்துகிறேன் பார் என்று அந்த புலம்பெயர் வர்த்தகர், தமிழ் அரசு கட்சியில் போட்டியிட்ட இன்னுமொரு கிறிஸ்தவ வேட்பாளருக்கு தேர்தல் செலவாக பணத்தை வாரி இறைத்ததுதான் மிச்சம். அவர் சுமந்திரனை மாத்திரமல்ல அந்த லிஸ்ட்டில் இருந்த புளொட்டின் புதிய வரவான கஜதீபனைக்கூட நெருங்க முடியவில்லை.

ஏனடா இந்தப் பழைய கதையெல்லாம் என்று நீங்கள் முணுமுணுப்பது நியாயமானதுதான். இந்தத் தேர்தலிலும் அப்படியொரு புலம்பெயர் வர்த்தக நிறுவனம் ஒன்று பணத்தை வாரி இறைத்து என்றாலும் பாராளுமன்றத்தில் தமக்கென்று ஒரு சிறிய பலத்தையாவது வைத்திருக்க முயற்சிக்கின்றது என்பதுதான் இன்று தமிழ் அரசியலில் முக்கிய பேசுபொருள்.

அடுத்த பாராளுமன்றம் எப்படி அமையப்போகின்றது என்பதை இன்றுவரை யாரும் கணிக்கமுடியாத நிலையே காணப்படுகின்றது. தெற்கில் ஜனாதிபதித் தேர்தலில் ஒவ்வொரு கட்சிகளும் பெற்ற வாக்குகளையே அந்தக் கட்சிகள் பாராளுமன்றத் தேர்தலில் பெற்றுவருவதுதான் கடந்த காலங்களில் நடந்து வருகின்றது. கோட்டாபய அறுபத்தி ஒன்பது இலட்சம் வாக்குகளைப் பெற்று மிகப்பெரிய வெற்றியை பெற்ற பின்னர் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் அதற்கு சற்றுக்குறைவான வாக்குகளையே பெறமுடிந்தது.

ஆனால், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் மாற்றத்துக்காக வாக்களித்திருந்தாலும் தேசிய மக்கள் சக்தியால் நாற்பத்தி இரண்டு சதவீத வாக்குகளையே பெறமுடிந்தது. ஆனாலும், அவர்கள் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற்றால்தான் ஜனாதிபதித் தேர்தலில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடம் இருப்பதால், அவர்கள் பெரும்பான்மையை பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனாலும், அவர்கள் விரும்பும் மாற்றங்களை செய்வதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படும் என்பதால், அடுத்த பாராளுமன்றத்தில் ஒவ்வொரு எம். பியும் முக்கியமானவராகவே இருக்கப்போகின்றார்.

இந்த நிலைமையை தமக்கு சாதகமாக பயன்படுத்தலாம் என்று அரசியல் கட்சிகள் மாத்திரமன்றி, அரசியல் தரகர்களும் இப்போதிருந்தே சிந்திக்கத் தொடங்கிவிட்டனர்.

அதனால், நாட்டு நிலைமையை தமக்கு எப்படி சாதகமானதாக்கலாம் என்பதில் சில 'கோப்ரேட்' நிறுவனங்களும் தீவிரமாகக் களத்தில் இறங்கியிருக்கின்றன.

அவ்வாறு களத்தில் இறங்கியிருக்கும் புலம்பெயர் தமிழ் வர்த்தக நிறுவனம் ஒன்றின் குழு ஒன்று, கொழும்பில் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் றூம்போட்டு தங்கியிருந்துகொண்டு, ஒவ்வோர் அரசியல்வாதியாக அழைத்து பேச்சு நடத்தி வருகின்றதாம். ஏற்கனவே, அரசியல் கட்சி ஒன்றை விலைக்கு வாங்கி வைத்திருக்கும் அந்த நிறுவனம், தமது கட்சியில் போட்டியிடுமாறு கேட்டு வருவதாகவும் அதற்கு விரும்பாத அரசியல்வாதிகளை தற்போது இருக்கும் கட்சியிலேயே போட்டியிட்டு வெற்றி பெற்ற பின்னர் தமது கட்சியில் இணைந்துகொள்ளுமாறும் கோரிக்கை விடுத்து வருகின்றதாம்.

இதில் வேடிக்கை என்னவென்றால், அவர்கள் கொழும்புக்கு அழைத்து பேசிய அத்தனை அரசியல்வாதிகளுமே, தாங்கள் நிச்சயம் இந்தத் தடவை வெற்றிபெறுவோம் என்றும் வெற்றிபெற்ற பின்னர் இணைவது பற்றி யோசிக்கலாம் என்று தலையாட்டிவிட்டே அங்கிருந்து புறப்படுகின்றனராம். அவ்வாறு அவர்கள் புறப்படுகின்றபோது, அவர்களின் தேர்தல் செலவுக்காக முதல் கட்ட அன்பளிப்பாக ஒரு தொகை வழங்கப்படுகின்றது என்கின்றது அங்கு சென்று வந்த பலரின் தரப்புகள்.

இந்தத் தேர்தல் எப்படி இருக்கப்போகின்றதோ தெரியவில்லை. ஆனால், தேர்தல் முடிந்த பின்னர் நடக்கப்போகின்ற விடயங்களை அறியத்தான் இந்த ஊர்க்குருவி ஆவலாகக் காத்திருக்கின்றது.!

- ஊர்க்குருவி.

# 12 உணவு நிலையங்களுக்கு ரூ. 135,000 அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 07

யாழ்ப்பாணம், பருத்தித்துறை நகரப் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய 12 உணவு கையாளும் நிலையங்களுக்கு ஓர் இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை நகர சபை பொதுச் சுகாதார பரிசோதகர் தலைமையில் நகரப் பகுதியிலுள்ள உணவு கையாளும் நிலையங்களில் திடீர் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, சுகாதாரச் சீர்கேடுகளுடனும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத வகையிலும் இயங்கிய 12 உணவு கையாளும் நிலையங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றுக்கு எதிராகப் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்குகள் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, உரிமையாளர்கள் தம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டனர்.

இதனையடுத்து, அவர்களை எச்சரித்த நீதிமன்று அவர்களுக்கு ஓர் இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது. (எ)

அரிசியில் செயற்கை தவிட்டு சாயம்

# மில் உரிமையாளருக்கு 20,000 ரூபாய் அபராதம்

யாழ்ப்பாணம்,

அரிசியில் செயற்கை தவிட்டு சாயம் கலந்த மில் உரிமையாளருக்கு மல்லாகம் நீதிமன்றத்தால் 20, 000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், சுதுமலை பகுதியில் உள்ள அரிசி ஆலை ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது செயற்கை தவிட்டு சாயங்கள் கலந்த ஒரு தொகை அரிசி கடந்த ஒகஸ்ட் மாதம் மீட்கப்பட்டது.

அவற்றை மேலதிக பரிசோதனைகளுக்காக அநுராதபுரத்தில் உள்ள அரச பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்பி வைத்த நிலையில், அரிசியில் சாயம் கலக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டது.

இதன் பிரகாரம் குறித்த அரிசி ஆலை உரிமையாளருக்கு எதிராக கடந்த 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதுடன் மில் உரிமையாளருக்கு 20, 000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. (எ)

# வடக்கு மாகாணத்துக்கான ரயில் சேவை மீள நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக். 07

10 மாதங்களாக முன்னெடுத்த திருத்த வேலைகளால் நிறுத்தப்பட்டிருந்த வடக்கு மாகாணத்துக்கான ரயில் சேவை மீண்டும் நிறுத்தப்பட்டது.

வடக்கு ரயில் பாதையில் மஹவ சந்தியில் இருந்து அநுராதபுரம் வரையிலான ரயில் பாதையில் சமிக்ஞைகளை சரிவர பொருத்தாத காரணத்தால் ரயில் சேவைகள் தற்போது முழுவதுமாக நிறுத்தப்பட்டுள்ளன.

பூரண திருத்த திட்டத்தின் கீழ் வடக்கு ரயில் சேவையை நிறுத்தி, கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் 10 மாதங்களாக திருத்த வேலைகள் நடைபெற்று வந்தன.

எனினும், தற்போது ரயில் பாதையின் திருத்தப் பணிகள் நிறைவடைந்த பின்னரும் கூட ரயில் சேவைக்குத் தேவையான சமிக்ஞைகளை பொருத்தாத காரணத்தால் ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

91. 27 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் திருத்தப்பட்ட மஹவ தொடக்கம் ஓமந்தை வரையிலான ரயில் பாதையில் 66. 4 கிலோமீற்றர் தூரத்திலான மஹவ தொடக்கம் அநுராதபுரம் வரையிலான பகுதியில் சமிக்ஞைகள் நிறுவப்படவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ)

## சிறீ ரெலோ தனித்து போட்டி

வவுனியா, ஒக். 07

வன்னித் தேர்தல் தொகுதியில் சிறீ ரெலோ கட்சி தனித்து போட்டியிடவுள்ளதாக அந்தக் கட்சியின் செயலாளர் ப. உதயராசா தெரிவித்தார்.

"தென்னிலங்கை மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி அரசியலில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளனர். அத்தகையதொரு அரசியல் புரட்சியை தமிழ் மக்களும் விரும்புகிறார்கள்.

எனவே வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் துடிப்புள்ள இளம் மற்றும் திறமை வாய்ந்த வேட்பாளர்களுடன் சிறீ ரெலோ கட்சி ஜனநாயக தேசிய கூட்டணி கட்சியின் தபால் பெட்டி சின்னத்தில் போட்டியிடுகின்றது" என்றார். (எ)

## ஆசிரியரின் வீடும் வாகனமும் தீக்கிரை!



முள்ளியவளை, ஒக். 07

முல்லைத்தீவு, முள்ளியவளையில் ஆசிரியர் ஒருவர் தங்கியிருந்த வீடு மற்றும் ஆசிரியரின் மோட்டார் சைக்கிள் என்பன இனம் தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டன.

சக ஆசிரியர்களின் உதவியுடன் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்ட போதும், ஆசிரியர் தங்கியிருந்த வீடு பகுதியளவில் எரிந்துள்ளது.

இதேவேளை, மோட்டார் சைக்கிள் பாவிக்க முடியாத வகையில் முழுமையாக எரிந்து நாசமாகியது.

முள்ளியவளையில் பிரபல பாடசாலையில் கற்பிக்கும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஆசிரியரின் வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

குறித்த ஆசிரியருக்கும், உயர்தர மாணவன் ஒருவருக்கும் இடையில் முரண்பாடு இருந்து வந்த நிலையில், குறித்த மாணவன் பாடசாலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டார். பின்னர் மீண்டும் அந்த மாணவனை பாடசாலையில் சேர்த்த நிலையில் நேற்று முன்தினம் இரவு குறித்த சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் கூறினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
07.10.2024 திங்கட்கிழமை
පී ළනාඩු
பிலவ வருடம், புரட்டாதி 21

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

## 13-அநுர என்ன செய்வார்?

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை சந்தித்த கலாநிதி சு. ஜெய்சங்கர், 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் அவசியப்பாட்டை வலியுறுத்தியிருக்கின்றார். ஜே. வி. பியின் தலைவரிடம் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துமாறு இந்தியா கூறுமளவுக்கு தென்னிலங்கை அரசியல் மாற்றமடைந்திருக்கின்றது. ஆனால், ஒன்றுமட்டும் மாறவேயில்லை. அதாவது, கொழும்பின் கதிரையில் எவர் இருந்தாலும் இந்தியாவின் தலையீடு அல்லது கரிசனை என்று வருகின்றபோது இறுதியில் 13ஆவது திருத்தச் சட்டம்தான் மேசைக்கு வருகின்றது.

2015இல் மைத்திரிபால சிறிசேன அதிகாரத்துக்கு வந்தபோது, அரசமைப்பின் 13ஆவது திருத்தத்திலிருந்து முன்னோக்கி பயணிப்பதற்கான அரிய வாய்ப்புக் கிடைத்தது. அதற்கான பாராளுமன்ற பெரும்பான்மையும் இருந்தது. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்தர்ப்பத்தை நழுவவிட்டது. தமிழர் தரப்பு சந்தர்ப்பங்களை நழுவவிட்ட சந்தர்ப்பங்கள் ஏராளம். தமிழர் அரசியலில் நழுவவிட்ட சந்தர்ப்பங்கள்தான் கூடிச் செல்கின்றனவே தவிர, சந்தர்ப்பங்களை கெட்டியாகப் பற்றிக்கொண்டு முன்னோக்கிப் பயணிக்கும் திறனை தமிழர் தரப்பு இதுவரையில் நிரூபிக்கவில்லை. இனியாவது நிரூபிக்க வேண்டுமென்று பிரார்த்திப்போமாக!

மாற்றங்கள் மட்டுமே நிரந்தரமானது. அரசியலில் மாற்றங்களை புறந்தள்ளுபவர்கள் அரசியலில் இருந்து புறந்தள்ளப்படுவார்கள். இந்த உண்மையை அறிந்து, அதற்கேற்ப செயலாற்றுபவர்கள் அரசியலில் காலூன்றுகின்றனர் - ஏனையவர்கள் காலாவதியாகின்றனர். இந்த அரசியல் யதார்த்தத்தை நமது அரசியல் தரப்புகள் புரிந்து கொள்ளவில்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை தாண்டிச் செல்ல வேண்டும் என்னும் கோரிக்கைகள் கடந்த முப்பத்தேழு ஆண்டுகளாக முன்வைக்கப்படுகின்றன. ஆனால், தாண்டிச் செல்லும் வழியை அறியவும் முடியவில்லை. ஆகக்குறைந்தது அதற்கான சிறிய கதவைக்கூட திறக்க முடியவில்லை. இந்த நிலையில் இந்தியாவின் 13ஆம் திருத்தம் தொடர்பான கோரிக்கை அன்றுபோல், இப்போதும் புதிது போன்றே தெரிகின்றது. ஏனெனில், வேறு தெரிவுகள் எதனையும் தமிழர்களால் முன்வைக்க முடியவில்லை - ஏன்? அதற்கான அரசியல் பலம் தமிழர்களிடம் இல்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஜே. வி. பி. கடுமையாக எதிர்த்திருந்தது. அது ஏனென்று கேட்டால் - அது வேறு அரசியல் சூழல் - அன்றைய உலக ஒழுங்கு வேறு. ஆனால், அதனைக் கொண்டு இப்போது நாம் சிந்திக்க முடியாது என்பதுதான் அநுரவின் பதிலாகும். அரசியல்ரீதியில் அநுரவின பதில் சரியானது - நேர்மையானது.

எனவே, அநுர மாறியிருக்கின்றார் என்பது உண்மை. ஆனால், இலங்கைத் தீவின் சிங்கள மேலாதிக்க மனோபாவத்துக்குள் அவரால் மாற முடிந்திருக்கின்றதா என்பதுதான் கேள்வி. ஏனெனில், இன்று அநுரவின் ஆதரவாளர்கள் அனைவருமே நேற்று கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரித்து மகிழ்ந்தவர்கள். கோட்டாவின் வெற்றிக்காக வெடி கொழுத்தியவர்கள். இந்த மனோநிலையுள்ள மக்களால் ஆதரிக்கப்படும் அநுரகுமார திஸநாயக்கவால் அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த முடிந்தால் அது நல்லதுதான். ஆனால், அது முடியுமா என்பதுதான் கேள்வி. சிங்கள மேலாதிக்க மனோநிலைக்குள் அதிகாரத்தை கைப்பற்றி ஒருவர், அந்த மனோநிலையுடன் மோதி வெல்ல முடியுமானால் அநுரவால் மாற்றங்களை ஏற்படுத்த முடியும். இலாவிட்டால்...?

# மதுபானம், குற்றவியல் தவறுகளற்றவர்கள் வேட்பாளர்களாக நிறுத்தப்பட வேண்டும்

## யாழில் மார்ச் 12 இயக்கம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக். 07

குற்றவியல் தவறுகளற்ற, இலஞ்ச - ஊழலற்ற மதுபானம், போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடாதவர்கள் பாராளுமன்றத் தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்தப்பட வேண்டும் என்று மார்ச் 12 இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

வேட்பாளர் தெரிவில் தூய்மையான அரசியலை பேணுமாறு வலியுறுத்தும் மார்ச் 12 இயக்கத்தின் செயல்பாட்டாளர்கள் 12 பேர் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை யாழ். நகரில் பவ்ரல் அமைப்பின் கள இணைப்பாளர் சசீஸ்காந்தை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது, எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் பற்றி இங்கு விவாதிக்கப்பட்டது.

பத்து ஆண்டுகளுக்கு முன்னரே, பாராளுமன்றத்தில் அச் சமயத்தில் அங்கம் வகித்த சகல அரசியல் கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு, எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்யவுள்ள சகல வேட்பாளர்களும் மார்ச் 12 இயக்கத்தின் எட்டு நியதிகளையும் பூர்த்தி செய்தவர்களாக இருத்தல் வேண்டும் என்பதை பவ்ரல் அமைப்பும் ஏனைய தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளும் கடுமையாக வலியுறுத்துவதன் மூலம் வேட்பாளர் தெரிவில் கட்சிகளும் குழுக்களும் தூய்மையான அரசியலை முன்னெடுக்க அழுத்தம் கொடுக்க வேண்டும் என இங்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குறிப்பாக போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் - குற்றவியல் தவறுகளற்ற, இலஞ்ச ஊழலற்ற ஒருவராக இருத்தலுடன் மதுபானம், போதைப் பொருள் விற்பனை, விபசார விடுதி நடத்துதல் ஆகிய நடவடிக்கைகளில் சம்பந்தப்படாதவர்களாக இருக்க வேண்டும். அத்தோடு, அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எவ்வகையிலும் ஊக்கம் அளிப்பவர்களாய் ஒருபோதும் இருக்கக் கூடாது என்பது வலியுறுத்தப்பட வேண்டும். மேலும் அவர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிப்பவர்களாகவோ, நாட்டுக்கு குந்தகம் விளைவித்த நிதிசார் ஒப்பந்தங்களின் பங்கு தாரராகவோ இருந்திருக்கக் கூடாது.

வேட்பாளர்கள் நியமனப் பத்திரம் தாக்கல் செய்வதற்கு முன்பு அல்லது தாக்கல் செய்த பின்னர் தாம் மார்ச் 12 இயக்கத்தின் தீர்மானங்களை ஏற்றுக்கொள்வது பற்றி பகிரங்கமாக பொது மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

இந்தத் தீர்மானங்கள் குறித்து பொதுசன ஊடகங்கள் ஊடாக பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட ஆயத்தமாகும் சகல அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களுக்கு அறிவிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

(எ)


# நீர்வேலியில் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 07

யாழ்ப்பாணம், நீர்வேலி வடக்கு காளி அம்பாள் தேவஸ்தான நவராத்திரி விழாக்குழு நடத்தும் பரிசளிப்பு விழா ஆலய பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை இரவு 7 மணிக்கு நவராத்திரி விழாக் குழுத் தலைவர் சி. டிசாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு. கலாதீபனும், சிறப்பு விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மகிந்தினி விஜயகுமாரும், கௌரவ விருந்தினராக ஆலயத்தின் தலைவர் இ. வதனமோகனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.


பூஜை வழிபாட்டினைத் தொடர்ந்து கலைப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. அத்தோடு, மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

(எ)



வரலாற்று சிறப்புமிக்க யாழ். வண்ணை சிறீ வேங்கடேசவர வரதராஜப் பெருமாள் தேவஸ்தான பெருந்திருவிழாவின் முன்றாம் நாள் திருவிழாவான வெள்ளிக் கருடசேவை திருவிழா பக்திபூர்வமாக நடைபெற்றது. (எ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 07 திங்கட்கிழமை
குரோதி வருடம் - புரட்டாசி 21
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : பஞ்சமி




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமையும் வீண் அலைச்சலும் இருக்கும். அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**இடபம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். புது தொழில்தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மிதுனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சமுக அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள். திடீர் யோகம் கிட்டும்.

**கடகம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்**
எதிர்ப்புகள் அடங்கும். பிள்ளைகளால் ஆறுதல் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.

**கன்னி**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வேற்றுமதத்தவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**துலாம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**தனுசு**
எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்கு உள்ளாவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. பொறுமை தேவைப்படும்.

**மகரம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். சொந்த பந்தங்கள் சிலர் கேட்டஉதவியை செய்வீர்கள். வியாபாரத்தில் நவீன யுக்திகளை கையாளுவீர்கள். பொறுப்புகளை ஏற்பீர்கள். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

**கும்பம்**
உங்களின் நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புதுஇடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததைமுடிப்பீர்கள்.

**மீனம்**
கோபத்தை கட்டுப்படுத்திஉயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். செலவுகளை கட்டுப்ப டுத்துவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

### தொல்பொருள் நிலம் என்றுகூறி

# மக்களின் விவசாய நிலங்களை கையகப்படுத்த துடிக்கும் பிக்கு

திருகோணமலை, ஒக். 07

திருகோணமலை மாவட்டம் குச்சவெளி பிரதேச செயலக பிரிவில் உள்ள மக்களின் விவசாய நிலங்களை தொல்பொருள் நிலம் என்றுகூறி பிக்கு ஒருவர் அப்பகுதி மக்களுக்கு பெரும் இடையூறுகளை ஏற்படுத்தி வருகிறார்.

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் ஆட்சியிலாவது இதற்கு உரிய தீர்வை பெற்றுத்தர வேண்டுமென அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



திருகோணமலை திரியாய்க் கிராமத்தின் பூர்வீக வயல் நிலங்களில் முக்கிய வயல் வெளிகளான வளத்தாமரை, ஆதிக்காடு, ஒட்டுப்புல்மோட்டை, நீராவிக் கண்டல் மற்றும் வேடன்குளம் என உள்ளடக்கிய வயல் வெளிகளில் மக்கள் பரம்பரை பரம்பரையாக நெற்செய்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் புல்மோட்டை அரிசிமலைப் பிக்குவால் அடாவடியாக கையகப்படுத்தப்பட்ட 88 ஏக்கர் பொதுமக்களின் உறுதிக் காணியில் விவசாயம் மேற்கொள்ள பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

வருடா வருடம் பெரும் போக செய்கையின் போது இவ்விதமான நெருக்கடிகளை மக்கள் எதிர்கொள்வதுடன், பிக்குவின் அடாவடியால் பயந்து இருப்பதுமான அவல நிலையில் மக்கள் உள்ளனர்.

நீதிமன்றால் மக்களிடம் காணிகளை கையப்படுத்தக் கோரியும் பிக்கு அடாவடியான முறையில் இந்தச் செயல்பாட்டை முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

(எ)

# கூடைப்பந்து அணிகள் சம்பியன்

கொழும்பு, ஒக். 07



மாலைதீவு கூடைப்பந்து சம்மேளனத்தால் நடத்தப்பட்ட சுப்பர் கிண்ண கூடைப்பந்து சுற்றுப் போட்டியில் விமானப் படை ஆண்கள் மற்றும் பெண்கள் கூடைப்பந்து அணிகள் சம்பியனாகின.

பெண்கள் அணியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த தமிழ் பெண் பி. சிவானுஜாவும் இலங்கை அணியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டிகளில் பங்குபற்றினார். இந்த நிலையில் மாலைதீவை எதிர்த்து விளையாடிய இலங்கை அணி 74: 72 என்ற புள்ளி அடிப்படையில் மாலைதீவை வீழ்த்தி வெற்றி பெற்றது.

மாலைதீவின் மாலே நகரில் செப்ரெம்பர் 26 முதல் 30 வரை இந்தப் போட்டிகள் நடைபெற்றன. அந்தவகையில் நான்கு நாடுகளின் அணிகள், குறிப்பாக உலகின் வலிமையான வெளிநாட்டு கூடைப்பந்து வீரர்களுக்கிடையே இந்தப் போட்டி நடத்தப்பட்டது.

(எ-05)

# சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டியில் யாழ். மாணவனுக்கு வெண்கலப்பதக்கம்



யாழ்ப்பாணம், ஒக். 07

சீனாவில் நடைபெற்ற சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டியில் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி தரம் -06 (ஆங்கில மொழி மூலம்) மாணவன் க. டினேசன் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார். மாணவனுக்கும் அவரை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களுக்கும் ஊக்கப்படுத்திய பெற்றோருக்கும் கல்லூரி சமூகத்தினர் வாழ்த்துகளும் பாராட்டுக்களும் தெரிவித்துள்ளனர்.

(எ)

# யாழில் விபத்தில் காயமடைந்த முன்னாள் போராளி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 07

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று பகுதியில் கடந்த 4ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த முன்னாள் போராளி ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சிகிச்சை [illegible]

[illegible] யடி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் செம்பியன் பற்று கடற்கரை வீதியில் இருந்து உள்ளக வீதிக்கு பயணித்த மோட்டார் சைக்கிளும் செம்பியன் பற்று வடக்கு நாற்சந்தியில் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தின் போது படுகாயமடைந்த மாமுனை பகுதியைச் சேர்ந்த முன்னாள் போராளியும், கண்ணிவெடி அகற்றும் மனிதாபிமான பணியை மேற்கொண்டு வந்தவருமான நடேசு பரமேஸ்வரன் என்பவர் யாழ். போதனா மருத்துவமனை அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்தார்.

(எ-02-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை குறித்த தீர்மானம் வாக்கெடுப்பின்றி காலநீடிப்பு?

## நாளை மறுதினம் நிறைவேற்றப்படும்

ஜெனிவா, ஒக். 06

**இலங்கை தொடர்பில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்தை மேலும் ஓராண்டுக்கு காலநீடிப்பு செய்யக்கோரி பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளால் தயாரிக்கப்பட்டிருக்கும் பிரேரணை நாளை மறுதினம் புதன்கிழமை ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படும் என்று அறிய வருகின்றது.**

ஜெனிவாவில் கடந்த செப்ரெம்பர் 9ஆம் திகதி ஆரம்பமான ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் முடிவுக்கு வருகிறது. கூட்டத் தொடரின் முதல் நாளிலேயே இலங்கை தொடர்பான விவாதமும் நடைபெற்றிருந்தது.

இந்த நிலையில், "இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்" எனும் தலைப்பில் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானமானது, கடந்த 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற 51 ஆவது கூட்டத்தொடரின் போது மீண்டும் காலநீடிப்பு செய்யப்பட்டு தற்போது 51/1 தீர்மானம் எனும் பெயரில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் தீர்மானம் செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவுக்கு வந்துள்ளது. இந்த நிலையில், பிரிட்டன் தலைமையில் அமெரிக்கா, கனடா, மலாவி, வடமசிடோனியா, மொன்டினீக்ரோ ஆகிய இணையனுசரணை நாடுகள் ஒன்றிணைந்து 51/1 தீர்மானத்தை மேலும் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு காலநீடிப்பு செய்வது குறித்து ஆராய்ந்தன.

அதற்கமைய "இலங்கையில் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மனித உரிமைகளை மேம்படுத்தல்" எனும் தலைப்பில் இணையனுசரணை நாடுகளால் தயாரிக்கப்பட்ட முதல் வரைவுக்கு சகல தரப்பினரதும் ஒப்புதல் பெறப்பட்டு, அதனைப் பெரும்பாலும் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரேரணை நாளை மறுதினம் புதன்கிழமை ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படும் எனவும், பெரும்பாலும் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படும் எனவும் கூறப்படுகின்றது. (ஐ)

# தீவிர அரசியலிலிருந்து ஒதுங்குகிறார் மகிந்த?

கொழும்பு, ஒக். 07

அரசியலில் இருந்து முழுமையாக ஓய்வுபெற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று அவர் தீர்மானித்துள்ளார் என்று முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன. இந்த நிலையில், சமகால அரசியலில் நிலவும் பாதகமான சூழல், உடல்நிலை, வயது போன்றவற்றை கருத்தில் கொண்டு அவர் இந்த முடிவை எடுத்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

அவரினதும் அவர் சார்ந்த அரசியல் கட்சியின்மீது முன்வைக்கப்பட்ட விமர்சனங்களும் இந்த முடிவுக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

கடந்த ஆட்சியின் போது இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு மகிந்த அரசாங்கமே காரணம் என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

# பொருட்களின் விலைகள் இரு வாரங்களில் குறையும்

கொழும்பு, ஒக். 07

அடுத்து வரும் இரு வாரங்களில் பொருட்களின் விலை குறைவடைய வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி வலுவடைந்ததால் அதன் பலனை நுகர்வோருக்கு பெற்றுக்கொடுக்கவுள்ளதாக வர்த்தக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, பொருட்களின் விலை குறைப்பு தொடர்பான வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பிரதமர் ஹரிணி அமரசூரிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார் என்றும் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

# மது விருந்தில் ஈடுபட்டவர் முதலைக்கு பலியானார்!

கொழும்பு, ஒக். 07

மது விருந்தில் ஈடுபட்டவர் நண்பர்களுக்காக ஆற்றைக் கடந்து இறைச்சி எடுத்துவந்த போது முதலை கடித்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் அநுராதபுரம் - சிறீபுர - கெமுனுபுர பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

மொர ஓயா அருகே நண்பர்கள் இணைந்து மது அருந்தியுள்ளனர். இதனிடையே, உயிரிழந்தவர் நண்பர்களுக்காக இறைச்சி எடுத்து வருவதற்காக வீட்டுக்கு செல்வதற்காக ஆற்றைக் கடந்துள்ளார். அப்போதே அவரை முதலை இழுத்துச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த 60 வயது நபரே உயிரிழந்தார்.

சிறீபுர பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தானியத்தில் தன்னிறைவு அடைய விசேட வேலைத் திட்டம் அறிமுகம்!

## விவசாய அமைச்சு

කෘෂිකර්ම දෙපාර්තමේන්තුව
விவசாயத் திணைக்களம்
Department of Agriculture

கொழும்பு, ஒக். 07

தானிய உற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்கான விசேட வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட விவசாய அமைச்சின் செயலாளர் எம். பி. என். எம். விக்கிரமசிங்க, "எதிர்வரும் பெரும் போகத்திலிருந்து இந்த வேலைத்திட்டம் நடைமுறைக்கு வரும்", என்றும் கூறினார்.

மேலும், "மக்காச்சோளம், உழுந்து, பயறு, நிலக்கடலை உள்ளிட்ட பல வகையான தானியங்களின் வருடாந்த அறுவடை நாட்டின் தேவைக்கே போதுமானதாக இல்லை. இதனால் ஒவ்வொரு வருடமும் அந்த தானியங்களை இறக்குமதி செய்வதற்கு பெருமளவு பணம் செலவிட வேண்டியுள்ளது.

"சோளத்தின் தேவை வருடத்துக்கு 6 மெற்றிக் தொன்னாகும். ஆனால், 3 மெற்றிக் தொன்னே உற்பத்தி செய்யப்படுகின்றது. இதன்படி, உள்ளூர் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் விரிவான திட்டத்துடன் தானியப் பயிர்கள் பயிரிடப்படும் - என்றார். (ஐ)

# ராஜபக்ஷ குடும்பம் கொள்ளையிட்ட மக்கள் பணத்தை விரைவில் மீட்போம்!

## தேசிய மக்கள் சக்தி

கொழும்பு, ஒக். 07

நாமல் உள்ளிட்ட ராஜபக்ஷ குடும்பத்தினர் கொள்ளையடித்த மக்கள் பணம் எங்கிருக்கின்றது என்பதை விரைவில் கண்டுபிடித்து வெளிக்கொண்டு வருவோம் என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க கூறியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி அதிகாரத்துக்கு வந்து இரு வாரங்களாகியும் தங்களின் ஊழலை ஏன் இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை என்று நாமல் ராஜபக்ஷ கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு பதிலளிக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ள வசந்த சமரசிங்க,

"நாமல் ராஜபக்ஷ போன்றவர்கள் கொள்ளையடித்த பணம் உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் சொத்துக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளதா? வேறு வகையில் பதுக்கப்பட்டுள்ளதா? என்பதை விரைவில் கண்டுபிடித்து வெளிக் கொண்டு வருவோம்.

இது ஊழல்வாதிகள் தாங்கள் இன்னும் மாட்டிக் கொள்ளவில்லை என்று சந்தோசப்பட்டுக் கொண்டிருக்கும் கடைசி மணித்துளிகளாகும். மிக விரைவில் அவர்கள் கூண்டோடு மாட்டிக் கொண்டு தங்கள் தவறுகளுக்கான தண்டனையை அனுபவிக்க நேரிடும் - என்றார். (ஐ)



# தே. எண்ணெய் குறித்த அச்சம் தேவையற்றது!

## பொது சுகாதார பரிசோதகர் சங்கம்

கொழும்பு, ஒக். 07

தேங்காய் எண்ணெய் பாவனை தொடர்பாக மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் பொது மக்களுக்கு அறிவித்துள்ளது.

அகில இலங்கை பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் இணைப்பாளர் புத்திக டி சில்வா முன்னதாக முன்வைத்த குற்றச்சாட்டுக்கு பதிலளித்தே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, முறையான நடைமுறைகள் பின்பற்றப்படாமல் இரசாயனங்களை பயன்படுத்தி செயற்கையாக சுத்திகரிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட 80 ஆயிரம் மில்லியன் கிலோகிராம் நிறையுடைய எண்ணெய் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக புத்திக டி சில்வா குற்றஞ்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தேர்தல் பிரசார செலவு அறிக்கையை வழங்காத 34 ஜனாதிபதி வேட்பாளர்கள்!

கொழும்பு, ஒக். 07

நடைபெற்று முடிவடைந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட 34 வேட்பாளர்கள் தமது தேர்தல் பிரசார செலவு அறிக்கையை இன்னமும் வழங்கவில்லை என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கிய 38 வேட்பாளர்களில் 4 வேட்பாளர்கள் மட்டுமே தங்களது பிரசார செலவு அறிக்கையை வழங்கியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

தேர்தல் செலவு கட்டுப்பாடு சட்டத்தின்படி கடந்த 13ஆம் திகதிக்குள் பிரசார செலவு அறிக்கைகளை தேர்தலில் போட்டியிட்டவர்கள் வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதிக்குள் தமது பிரசார செலவு அறிக்கையை வழங்காத வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 முன்னாள் எம். பிக்கள் தேர்தலிலிருந்து ஒதுங்கினர்!

கொழும்பு, ஓக். 07

**கடந்த பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த உறுப்பினர்களில் 30 பேர் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று முடிவெடுத்துள்ளனர்.**

இதன்படி, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன், ரெலோவின் வினோ நோகராதலிங்கம், முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, முன்னாள் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, சமல் ராஜபக்ஷ, ஜோன் செனவிரத்ன, வாசுதேவ நாணயக்கார, பந்துல குணவர்த்தன, காமினி லொக்குகே, சிசிர ஜயக்கொடி, விஜயதாச ராஜபக்ஷ.

மற்றும், தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றத்துக்கு வந்த திஸ்ஸ விதாரண, ஜீ. எல். பீரிஸ், தம்மிக பெரேரா, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அலிசப்ரி உள்ளிட்டவர்களும் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை என்று தெரியவருகின்றது.

இதேநேரம், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சார்ள்ஸ் நிர்மலநாதன் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தான் போட்டயிடப்போவதில்லை என்று அறிவித்தார். எனினும், அவர் சுமந்திரனின் அழைப்பை ஏற்று தேர்தலில் போட்டியடவுள்ளார் என்று கூறப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி போட்டி!

## ஹக்கீம் அம்பாறையில் களமிறங்குவார்?

கொழும்பு, ஓக். 07

ஐக்கிய மக்கள் சக்தியும் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸூம் கூட்டாகத் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் பேச்சுகளை நடத்தி வருகின்றன.

இது குறித்து முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளர் நிஸாம் காரியப்பர் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் நாம் உள்ளோம். அந்தக் கூட்டணியிலேயே நாம் பாராளுமன்றத் தேர்தலையும் எதிர்கொள்ளவுள்ளோம். தற்போதைய நிலையில் ஆசன ஒதுக்கீடு சம்பந்தமான பேச்சுகள் நடைபெற்று வருகின்றன. அடுத்து வரும் நாட்களில் அது இறுதியாகும் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

இதேவேளை, சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமை அம்பாறையில் போட்டியிடுவதற்கு பல்வேறு தரப்பினரும் அழைப்பு விடுத்துள்ளனர். அந்தக் கட்சியின் மரச் சின்னத்தில் ஹக்கீம் அம்பாறையில் களமிறங்குவார் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# புதிய கூட்டணிக்கு ரணிலே தலைவர்!

கொழும்பு, ஓக். 07

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய கூட்டணிக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்குவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

தற்போது புதிய கூட்டணியை உருவாக்கும் நோக்கில் எதிர்க்கட்சிகளின் அரசியல் கட்சிகள் பல்வேறு கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றன. எனினும், பொதுத் தேர்தலில் எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டு சேர்வது குறித்து ஐக்கிய மக்கள் சக்தி கலந்துரையாடிய போதிலும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்வைத்த நிபந்தனைகளால் பேச்சு முறிவடைந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அம்பாறையில் தனித்தே போட்டி!

## கட்சி தலைவர் ரிஷாத் அறிவிப்பு



கொழும்பு, ஓக். 07

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அம்பாறையில் தனித்து போட்டியிடும். இதேநேரம், ஏனைய இடங்களில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் போட்டியிட இணக்கம் எட்டியுள்ளதாக அந்தக் கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மேலும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இம்முறையும் தனியாகவும் கூட்டாகவும் இணைந்து போட்டியிடத் தீர்மானித்துள்ளது. அந்த வகையில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியுடன் இணைந்து போட்டியிடவுள்ளோம்.

இதேநேரம் அம்பாறை மாவட்டத்தில் தனியாக போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளோம். அந்த வகையில் எமது கட்சி வன்னி, புத்தளம், குருநாகல், திருகோணமலை, மட்டக்களப்பு உள்ளிட்ட மாவட்டங்களில் கூட்டணியாகப் போட்டியிடும்.

இதேநேரம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இம்முறை புதியவர்களையும் துறை சார்ந்த அனுபவம் வாய்ந்தவர்களையும் களமிறக்குவதற்கு தீர்மானித்துள்ளது - என்றும் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார். (ஐ)

# ஐ. எம். எவ். குழுவினருடான பேச்சு வெற்றிகரமாக நிறைவு!

கொழும்பு, ஓக். 07

இலங்கையின் உத்தியோகப்பூர்வ கடன்வழங்குநர் குழு மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் நடைபெற்ற பேச்சுகளை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு வந்துள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

நிதியமைச்சு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த ஜூன் மாதம் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவுடனும் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியுடனும் இணக்கம் காணப்பட்ட விடயங்களும், உத்தியோகபூர்வ கடன் மறுசீரமைப்பு தொடர்பான உடன்படிக்கையில் அடங்கியுள்ள விடயங்களும், சர்வதேச நாணய நிதிய நிபந்தனைகளுக்கு அமைவானது என்பதனை அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

புதிய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் அறிவித்துள்ள திட்டங்களுடன் தொடர்புடைய கடன் இலக்குகள், இணக்கப்பாடுகள் மற்றும் நிபந்தனைகள் என்பன ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அவற்றுக்கு அமைவாக, சர்வதேச இறையாண்மை முறிகளை மறுசீரமைப்பதற்கும் அனுமதி கிடைத்துள்ளதாக நிதியமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கொழும்பு - லண்டன் விமான பாதை மாற்றம்!

## சிறீ லங்கன் எயார் லைன்ஸ் அறிவிப்பு

கொழும்பு, ஓக். 07

கொழும்பு - லண்டன் இடையிலான விமானப் பாதையில் சிறீ லங்கன் எயார் லைன்ஸ் மாற்றம் செய்துள்ளது.

இஸ்ரேல்மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியதை அடுத்து ஈராக் வான்பரப்பை தவிர்க்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக சிறீ லங்கன் எயார் லைன்ஸ் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இருந்து லண்டனுக்கான விமானங்கள் எகிப்து வான்வெளி ஊடாகவே இனி நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக குறித்த விமான பயணத்தின் நேரம் அண்ணளவாக 30 நிமிடங்கள் அதிகரிக்கும். இதன்படி எரிபொருள் பாவனையும் அதிகரிக்கும் - என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மரக் கிளையை வெட்டியவர் ரீசேர்ட் கிளையில் சிக்கி பலி!

கொழும்பு, ஓக். 07

மரத்தின் கிளைகளை வெட்டியவர் தவறிவீழ்ந்தபோது அவர் அணிந்திருந்த ரீசேர்ட் கிளையில் சிக்கி கழுத்து நெரிபட்டு உயிரிழந்தார்.

குருநாகல் - வாரியபொல - கொங்கொல்லையை சேர்ந்த 62 வயதான விவசாயி ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர், தனது வயலுக்கு அருகாமையிலிருந்த மரத்தின் கிளைகளை வெட்டி அகற்றியுள்ளார். அந்தச் சமயம் மரத்திலிருந்து தவறி விழுந்த போது அவர் அணிந்திருந்த ரீசேர்ட் கிளையில் சிக்கியுள்ளது. இதில், கழுத்து நெரிபட்டு அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

அந்த வழியாக சென்ற பெண் ஒருவர், மரத்தின் கிளையில் விவசாயி சடலமாக கிடப்பதை பார்த்து அயலவர்களுக்குத் தெரிவித்ததைத் தொடர்ந்து சடலம் மீட்கப்பட்டது.

வாரியப்பொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தண்ணீர் போத்தல்களுக்கு இனி கட்டுப்பாட்டு விலை!

கொழும்பு, ஓக். 07

சந்தையில் தற்போது 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் 500 மில்லிலீற்றர் தண்ணீர் போத்தல் ஒன்றை 70 ரூபாவிற்கு விற்பனை செய்ய முடியும் என மத்திய மாகாண இயற்கை கனிய நீர் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அந்த சங்கத்தின் அழைப்பாளர் சபுமல் குமார இதனைத் தெரிவித்தார்.

இதன்படி தண்ணீர் போத்தல்களுக்கு உடனடியாக கட்டுப்பாட்டு விலையை விதிக்க வேண்டும் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (அ)

# வரி நிலுவைத் தொகையை வசூலிக்கும் திட்டம் ஆரம்பம்!

கொழும்பு, ஓக். 07

வரி செலுத்தாத நிறுவனங்களுக்கு நேரடியாகச் சென்று நிலுவையை வசூலிக்கும் செயல் திட்டம் நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக இறைவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு இறைவரி திணைக்களம் செப்ரெம்பர் மாத ஆண்டு வருவாய் இலக்கான 2 இலட்சத்து 2 ஆயிரத்து 400 கோடி ரூபாயை தாண்டியுள்ளது.

வசூல் முன்னேற்றம் பாராட்டத்தக்கது என்றாலும், சுய மதிப்பீட்டு முறையின் கீழ் சில வரி செலுத்துவோரி வரிகள் இன்னமும் நிலுவையில் உள்ளன என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் செபாலிகா சந்திரசேகர குறிப்பிட்டார்.

எனவே, வரி செலுத்துவோரின் நிறுவனங்களுக்கு சென்று நிலுவைத் தொகையை விரைவாக வசூலிக்கும் திட்டத்தை நேற்றைய தினம் ஆரம்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறிய விடயங்களை நிறைவேற்றுவோம்!

## மகாநாயக்க தேரரிடம் ஜனாதிபதி உறுதி



கொழும்பு, ஒக். 07

**தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டவாறு தீர்மானங்களை எடுப்பதே எமது நோக்கம். பாராளுமன்ற தேர்தலின் பின்னர் உரிய மறுசீரமைப்புகளை முன்னெடுப்போம் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க ராமண்ய பீட மகாநாயக்க தேரரிடம் குறிப்பிட்டுள்ளார்.**

கொழும்பு - நாரஹன்பிட்டியிலுள்ள ராமண்ய பீடத்துக்கு நேற்று முன்தினம் ஜனாதிபதி அநுரகுமார சென்று, மகாநாயக்க தேரர் மகுலேவே விமல நாயக்க தேரரை சந்தித்து ஆசி பெற்றார். அநுநாயக்க தேரர்கள், பதிவாளர்கள் தலைமையிலான மகா சங்கத்தினரும் இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.

இதனையடுத்து ஜனாதிபதி தற்போதைய பொருளாதார அரசியல் நிலைமைகள் குறித்து மகா சங்கத்தினருக்கு எடுத்துக் கூறும் வகையில் சிறிது நேரம் கலந்துரையாடினார்.

தூதுவர்களை நியமிக்கும் போது, கற்ற, அறிவார்ந்த, வெளிநாடுகளில் இந்நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய பொருத்தமானவர்களை நியமிக்குமாறும் ஆளுநர்களை நியமிக்கும்போது அரசியல் நோக்கஙங்காக அன்றி பொறுப்பானவர்களை நியமிக்குமாறும் மகா சங்கத்தினர் ஜனாதிபதிக்கு அறிவுறுத்தினர்.

இதேபோல் அமைச்சுக்களின் செயலாளர் பதவிக்கும் பொருத்தமானவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டவாறு தீர்மானங்களை எடுப்பதே தனது நோக்கம் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் உரிய மறுசீரமைப்புகளை செய்ய எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார். (ஐ)

# சமூக வலைத்தளங்களில் தகவல்களை வழங்காதீர்!

## பொதுமக்களுக்கு அறிவுறுத்து

கொழும்பு, ஒக். 07

சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் போலியான செய்திகளுக்கு அமைய வங்கிக் கணக்குகள் உள்ளிட்ட தனிப்பட்ட தகவல்களை வழங்குவதைப் பொதுமக்கள் தவிர்க்க வேண்டும் - இவ்வாறு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

சமூக வலைத்தளங்களில் அவ்வாறான போலியான தகவல்கள் தொடர்ந்தும் பரப்பப்படுவதாகவும் ஆணைக்குழுவின் பிரதி பணிப்பாளர் மேனகா பத்திரண தெரிவித்துள்ளார். (ஐ)

# மைத்துனரின் தாக்குதலில் 11 பிள்ளைகளின் தந்தை பலி!

கொழும்பு, ஒக். 07

மைத்துனர் கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் படுகாயமடைந்த 11 பிள்ளைகளின் தந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

செல்லப்பன் பாலகிருஷ்ணன் (வயது 41) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

இரத்தினபுரி - இறக்குவானை - ரங்வலதென்ன தோட்டத்தை சேர்ந்த குறித்த நபருக்கு இரு மனைவியர் உள்ளனர். மூத்த மனைவி மூலம் அவருக்கு 7 பிள்ளைகளும் இரண்டாவது மனைவி மூலம் அவருக்கு 4 பிள்ளைகளும் உள்ளனர்.

இந்த நிலையில், மூத்த மனைவியின் சகோதரனுக்கும் அவருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதன்போது மைத்துனர் அவரை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

இறக்குவானை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் பின்னர் இரத்தினபுரி பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு கடந்த 10 நாட்களாக சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அது பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

இறக்குவானை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பொதுத் தேர்தல் கண்காணிப்பில் 5,000 பணியாளர்கள் ஈடுபடுவர்!

## பவ்ரல் அமைப்பு அறிவிப்பு

கொழும்பு, ஒக். 07

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் கண்காணிப்புப் பணிகளுக்காக சுமார் 5 ஆயிரம் பேரை கடமையில் அமர்த்தவுள்ளதாக பவ்ரல் அமைப்பு அறிவித்துள்ளது.

இந்த விடயத்தை அந்த அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை விடவும் கூடுதல் எண்ணிக்கையில் பணியாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படள்ளனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் சுமார் 4 ஆயிரம் பேர் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டிருந்தனர். பொதுத் தேர்தலில் நீண்ட நாள் அடிப்படையிலான கண்காணிப்பாளர்களாக 200 பேர் வாகனங்களுடன் நியமிக்கப்படவுள்ளனர்.

PAFFREL

பொதுத் தேர்தலின்போது விருப்பு வாக்குகளும் எண்ணப்படுவதால் வாக்கு எண்ணும் நிலையங்களில் கூடுதல் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த பவ்ரல் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஐ)

# சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட சொகுசு ஜீப் வண்டி கைப்பற்றப்பட்டது

கொழும்பு, ஒக். 07

நாட்டுக்குள் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட சொகுசு ஜீப் ரக வாகனத்தை பதுளை வர்த்தகர் ஒருவரிடமிருந்து இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு கைப்பற்றியுள்ளது.

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட இந்த சொகுசு ஜீப் ரக வாகனம் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் அரசாங்கத்துக்கு பெரும் வரி இழப்பு ஏற்பட்டுள்ளதாக கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஜீப் ரக வாகனத்தை கடந்த செப்ரெம்பர் 18ஆம் திகதிக்கு முன்னதாக கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழுவில் கையளிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

எனினும், அந்த உத்தரவு நிறைவேற்றப்படவில்லை. இந்த நிலையிலேயே குறித்த வாகனத்தை கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழு கைப்பற்றியுள்ளது.

அத்துடன் அந்த வர்த்தகருக்கு எதிராக நீதிமன்றம் பிறப்பித்துள்ள பிடியாணை நடைமுறைப்படுத்தப்படும் எனவும் கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்தது. (ஐ)

# பேருந்து விபத்தில் இருவர் படுகாயம்!

கொழும்பு, ஒக். 07

முன்னால் சென்றுகொண்டிருந்த பேருந்தை முந்திச் செல்ல முயன்ற தனியார் பேருந்து எதிரே வந்த லொறியுடன் மோதிய விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து பாதெனிய - அநுராதபுரம் வீதியில் தலாவை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமடைந்தவர்கள் அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

# ஊழல் குற்றம் சுமத்தப்பட்டோரை வேட்பாளராக நியமிக்காதீர்கள்!

## கட்சிகளை கோருகிறது மார்ச் 12 இயக்கம்

கொழும்பு, ஒக். 07

ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டோருக்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் வேட்புமனு வழங்க வேண்டாம் என்று மார்ச் 12 இயக்கம் அரசியல் கட்சிகளிடம் கோரியுள்ளது.

அதன் இணைப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

உரிய வேட்பாளர்களை அரசியல் கட்சிகள் பட்டியலில் இணைக்காவிட்டால் மக்களுக்கு சிறந்த அரசியல் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு இல்லாமல் போகும். ஊழல், குற்றங்கள் மற்றும் சுற்றாடலுக்குத் தீங்கு விளைவித்த உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்களை தேர்தலில் போட்டியிட அரசியல் கட்சிகள் அனுமதிக்கக் கூடாது.

எனவே, அரசியல் கட்சிகள் தமது பொறுப்பை உரிய வகையில் நிறைவேற்ற வேண்டும் - என்றும் அவர் வலியுறுத்தினார். (ஐ)

# முட்டையின் விலை மீண்டும் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 07

சந்தையில் முட்டையின் விலை மீண்டும் அதிகரித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

பல பிரதேசங்களில் தற்போது முட்டை ஒன்றின் விலை 40 ரூபாயை கடந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

எனினும், அண்மை நாட்களில் முட்டை ஒன்றின் விலை 30 ரூபாய் அல்லது அதற்கும் குறைவாகவே விற்பனையானது.

முட்டை உற்பத்தி வீழ்ச்சியடைந்தமையே முட்டை விலை மீண்டும் அதிகரிக்கக் காரணம் என்று கூறப்பட்டது. (ஐ)

# பழங்கால பொருட்களை பெற அகழ்வில் ஈடுபட்டவர்கள் கைது

கொழும்பு, ஒக். 07


தொல்பொருள் திணைக்களத்துக்கு சொந்தமான இடத்தில் பழங்கால பொருட்களை எடுப்பதற்காக அகழ்வில் ஈடுபட்ட மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கம்பஹா - நவ குறுந்துவத்த பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் கைதான மூவரும் நீர்கொழும்பு மற்றும் மீதலாவ பிரதேசங்களைச் சேர்ந்த 29, 39 மற்றும் 55 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் முதல் தடவையாக 2,340 பேருக்கு பட்டமளிப்பு விழா





மட்டக்களப்பு, ஒக். 07

**கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2023ஆம் ஆண்டுக்கான 28 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நேற்று முன்தினமும் நேற்று ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற்றது. இதில் வரலாற்றில் முதல் தடவையாக அதிகூடிய எண்ணிக்கையிலான (2340) மாணவர்கள் பட்டம் பெற்றுள்ளனர்.**

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் வல்லிபுரம் கனகசிங்கம் ஒருங்கிணைப்பில் நல்லையா ஞாபகார்த்த மண்டபத்தில் பட்டமளிப்பு விழா நடை பெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் மா. செல்வராஜா பட்டமளிப்பு விழாவுக்கு தலைமை தாங்கியதுடன் பட்டதாரிகளின் பட்டங்களையும் உறுதி செய்துள்ளார்.

யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.வரலாற்றில் முதல் தடவையாக அதிகூடிய எண்ணிக்கையிலான மாணவர்கள் இம்முறை பட்டம் பெற்றுள்ளனர்.

2340 உள்வாரி, வெளிவாரி, கலாநிதி மற்றும் பட்டப்பின் படிப்பு பட்டங்கள் இம்முறை பொதுப் பட்டமளிப்பு விழாவில் வழங்க உறுதிசெய்யப்பட்டுள்ளதாக கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் கனகசிங்கம் தெரிவித்தார்.

பட்டமளிப்பு விழாவின் முதல் நாளில் முதலாவது அமர்வின் போது இரு கலாநிதிப் பட்டங்கள், ஒரு முதுதத்துவ மாணி, இரு விஞ்ஞான கல்வியில் முதுமாணி, ஒரு விவசாய விஞ்ஞானத்தில் முதுமாணி, 58 கல்வியியல் முதுமாணி, 04 கலை முதுமாணி, 05 வியாபார நிர்வாக முதுமாணி, 31 அபிவிருத்தி பொருளியல் முதுமாணி மற்றும் 153 இளங்கலைமாணி பட்டங்கள் (வைத்தியமாணி, சத்திர சிகிச்சைமாணி, சிறப்பு தாதியியல் விஞ்ஞானமாணி, தாதியியல் விஞ்ஞானமாணி, சிறப்பு விவசாய விஞ்ஞானமாணி, விவசாய விஞ்ஞானமாணி) வழங்கப்பட்டன.

வணிக நிர்வாகமாணி, சிறப்பு வணிக நிர்வாகமாணி, சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் சிறப்பு வணிக நிர்வாகமாணி, மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு வணிக நிர்வாகமாணி, சிறப்பு வணிகவியல்மாணி, வணிகவியல்மாணி, கணக்கீடு மற்றும் நிதியியல் சிறப்பு வணிகவியல் மாணி, வணிக பொருளியல் சிறப்பு வணிகவியல் மாணி, விஞ்ஞானமாணி, சிறப்பு விஞ்ஞானமாணி எனும் வகையில் 333 பட்டங்களும், சித்தமருத்துவம் - சத்திர சிகிச்சை இளமாணி, சிறப்பு விஞ்ஞான மாணி, கணினி விஞ்ஞானமாணி விவசாய தொழில்நுட்பம் மற்றும் முயற்சியாண்மையில் உயிர் முறைமைகள் தொழில்நுட்ப கௌரவ இளமாணி, தொடர் பாடல் கற்கைகளில் கலைமாணி, மொழியியல் கலைமாணி, எனும் வகையில் 424 பட்டங்களும் மற்றும் நுண்கலைமாணி - இசை நுண்கலைமாணி - நடனம், நுண்கலைமாணி - நாடகமும் அரங்கியலும், நுண்கலைமாணி - கட்புலமும் தொழில்நுட்பவியல் கலையும் எனும் வகையில் 204 பட்டங்களும் முதலாம் நாளில் 2ஆவது 3ஆவது, 4ஆவது அமர்வுகளில் வழங்கப்பட்டன.

மேலும், கல்விமாணி மற்றும் கலைமாணி (விசேட பட்டம்) எனும் வகையில் 321 பட்டங்களும் கலைமாணி (பொதுப்பட்டம்) எனும் வகையில் 740 பட்டங்களும் வியாபார முகாமைத்துவமாணி (வெளிவாரி) எனும் வகையில் 61 பட்டங்களும் 2ஆம் நாளின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் அமர்வுகளில் பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்டன.

(எ)

# நற்பிட்டிமுனை நூலகத்தில் சிறுவர் பிரிவு திறந்துவைப்பு

கல்முனை, ஒக். 07

கல்முனை, கரைவாகு மேற்கு நற்பிட்டிமுனை பொது நூலகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பிரிவு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நூலகர் எஸ். எம். ஆர். அமினுதீன் தலைமையில் நடைபெற்ற இந்த திறப்பு விழாவில் கல்முனை மாநகர சபை ஆணையாளர் என். எம். நௌபீஸ் பிரதம விருந்தினராகவும் உதவி ஆணையாளர் ஏ. எஸ். எம். அஸீம் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது சிறுவர்களின் கலை கலாசார நிகழ்ச்சிகள் நடைபெற்றதுடன் அவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

(எ)



# இரத்த தானம் குறித்து சமூக மட்ட அமைப்புகளுடன் கலந்துரையாடல்

கல்முனை, ஒக். 07

மருத்துவமனைகளில் ஏற்படும் குருதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் இரத்த தான பணிகளை செய்கின்ற சமூக மட்ட அமைப்புகள் மற்றும் இரத்த வங்கி பொறுப்பு மருத்துவ அதிகாரிகளுக்கு இடையிலான கலந்துரையாடலொன்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பதிகாரி எ. சீ. எம். மாஹிர் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

(எ)





# 67ஆவது ஆண்டு நிறைவு விழா

கொக்கட்டிச்சோலை, ஒக். 07

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 67ஆவது ஆண்டு நிறைவு விழா மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை கமநல சேவை நிலையத்தில் நடைபெற்றது.

பெரும்பாக உத்தியோகத்தர் கோ. உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதியோர் மற்றும் சிறுவர் தின நிகழ்வுகளும் நடைபெற்றன.

# சித்த மருத்துவ பல்கலைக்கழகத்தை யாழ். இந்திய தூதுவர் பார்வையிட்டார்

திருகோணமலை, ஒக். 07

அகத்திய மா முனிவரால் உலகிலேயே முதலாவதாக நிறுவப்பட்ட சித்த மருத்துவ பல்கலைக்கழகத்தை யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டனர்.

கிழக்கு பல்கலைக்கழக திருகோணமலை வளாக சித்த மருத்துவபீடம் மற்றும் நிலாவெளி மாவட்ட சித்த ஆயுள்வேத வைத்தியசாலை, கப்பல்துறை சித்த ஆயுள்வேத தள வைத்தியசாலை இணைத்து நடத்திய மாபெரும் இலவச சித்த மருத்துவ முகாம் அகத்தியர் ஸ்தாபனமாகிய மூதூர் கங்குவேலி திருக்கரைசை



மாநகர் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் நடைபெற்றது.

கங்குவேலி அகத்தியர் ஸ்தாபன தலைவர் தவராஜா தலைமையில் நடைபெற்ற இந்த இலவச சித்த மருத்துவ முகாமுக்கு யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி மற்றும் தூதரக அதிகாரி நடராஜா ஆகியோர் கலந்துகொண்டு மருத்துவ முகாமை ஆரம்பித்து வைத்தனர்.

(எ)

# தமிழ் மொழித் தினப் போட்டிகளில் கல்முனை வலயத்துக்கு 2 முதலிடம்

கல்முனை, ஒக். 07

அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டிகளில் கல்முனை கல்வி வலயத்துக்கு இதுவரை இரண்டு தங்கப் பதக்கங்கள் கிடைத்துள்ளன.

பிரிவு 5 பேச்சுப் போட்டியில் நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாடசாலை மாணவன் மு. அஸாமும், பிரிவு 1 ஆக்கமும் எழுத்தும் போட்டியில் நிந்தவூர் அல் - மஸ்ஹர் மகளிர் உயர்தர பாடசாலை மாணவி ம. ஹஸ்னத் ஹனாவும் முதலிடம் பெற்றுள்ளனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானின் அணுசக்தி தளங்களை முதலில் தாக்கி அழிக்க வேண்டும்

## இஸ்ரேலுக்கு ட்ரம்ப் விபரீத ஆலோசனை

வாஷிங்டன், ஒக். 07

**"முதலில் ஈரானின் அணுசக்தி தளங்களை தாக்கி அழியுங்கள், பின்னர் நடப்பவற்றை பார்த்துக் கொள்ள லாம்" என்று இஸ்ரேலுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்.**

வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு, "பைடன் தவறான புரிதலுடன் இருக்கிறார். அணு சக்தியை பயன்படுத்த வேண்டும் என ஈரான் திட்டமிட்டால் அதனை அவர்கள் இஸ்ரேலுக்கு எதிராகப் பயன்படுத்தியே தீருவார்கள். அணு சக்தி தானே உலகுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல். அதனால், முதலில் ஈரானின் அணுசக்தி தளங்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்துவதே சரியாக இருக்கும். இதை



இஸ்ரேல் முதலில் செய்ய வேண்டும். பின்னர் மற்றதைப் பற்றிக் கவலைப்படலாம்"என்று விபரீத ஆலோசனை வழங்கியுள்ளார். (எ)

# இரு தரப்பு உறவு பற்றி விவாதிக்க நான் பாகிஸ்தான் செல்லவில்லை

## இந்திய வெளிவிவகார அமைச்சர்

புதுடில்லி, ஒக். 07

இந்தியா - பாகிஸ்தான் உறவு பற்றி விவாதிக்க தான் அங்கு செல்லவில்லை என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்தார்.


புதுடில்லியில் செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,"ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (எஸ். சி. ஓ.) உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இம்மாத மத்தியில் நான் பாகிஸ்தான் செல்ல திட்டமிட்டுள்ளேன். எனது பயணம் இந்தியா - பாகிஸ்தான் உறவுகளைப் பற்றியது அல்ல. ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பொறுப்



பான உறுப்பினராக இருப்பது மட்டுமே. நமது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவின் காரணமாக நிறைய ஆர்வம் இருக்கலாம். நான் தெளிவாக இருக்க விரும்புகிறேன். இது பலதரப்பு நிகழ்வு. நான் எஸ். சி. ஓவில் நல்ல உறுப்பினராக இருப்பேன். அதற்கேற்ப கண்ணியமான நபராக நடந்து கொள்வேன்"- என்றார். (எ)

# கனமழை, வெள்ளம் 16 பேர் உயிரிழந்தனர்

போஸ்னியா, ஒக். 07



தென்கிழக்கு ஐரோப்பாவில் உள்ள பால்கன் தீபகற்பத்தில் உள்ள போஸ்னியா நாட்டில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் பல்வேறு பகுதிகளில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இது வரை 16 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர். நிலச்சரிவு காரணமாக நகரங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள வீதிகள் துண்டிக்கப்பட்டுள்ளன மற்றும் சில இடங்களில் வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன.

கனமழை, வெள்ளம், நிலச்சரிவு காரணமாக காணாமல்போனவர்களைத் தேடும் பணியில் மீட்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# இஸ்ரேல் - ஈரான் மோதல்போக்கு முழுவீச்சு போராக மாறக்கூடாது

## அமெரிக்க ஜனாதிபதி பைடன் தெரிவிப்பு

வாஷிங்டன், ஒக். 07

இஸ்ரேல் - ஈரான், இஸ்ரேல் - லெபனான் இடையிலான மோதல் முழு வீச்சுப் போராக மாறக்கூடாது என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்தார்.

ஈரான் அணுசக்தி தளங்கள் மீது தாக்குதல் நடத்தப்படுமா? என்று வாஷிங்டனில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பைடன் அளித்த பதில் வருமாறு,



"அவர்கள் (ஈரான்) தாக்குதல் நடத்தினால் பதிலடி கொடுக்கப்படும். மழை வருமா எனக் கேட்டால் அதற்கு எத்தனை சாத்தியக்கூறுகளை சொல்ல முடியுமோ அதுபோன்றதுதான் அணுசக்தி தளங்கள் மீதான தாக்குதல் குறித்த கேள்விக்கான பதிலும் அமையும். இஸ்ரேல் - லெபனான் மோதலால் மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரிப்பது தடுக்கப்பட வேண்டும். முழு வீச்சுப் போருக்கு வாய்ப்பில்லை. அது தவிர்க்கப்பட வேண்டும். உண்மையில் அதனைத் தவிர்க்க வாய்ப்புகள் உள்ளன"- என்றார்.

# ஹிஸ்புல்லா, ஹமாஸை இஸ்ரேல் வீழ்த்த முடியாது

## ஈரான் உயர் தலைவர் ஐயத்துல்லா



தெஹ்ரான், ஒக். 07

ஹிஸ்புல்லா மற்றும் ஹமாஸை இஸ்ரேலால் ஒருபோதும் வெற்றி கொள்ள முடியாது என்று ஈரான் நாட்டின் உயர் தலைவரும், மத குருவுமான ஐயத்துல்லா அலி காமெனி தெரிவித்தார்.

ஹமாஸ், ஹிஸ்புல்லா அமைப்புகளை இலக்கு வைத்து இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல் தீவிரமடைந்துள்ள நிலையில், ஐயத்துல்லா அலி காமெனி அரிதான உரையாற்றினார். அப்போது அவர், "இந்த பிராந்தியத்தில் இருந்து மேற்கு நாடுகளுக்கு எரிசக்தியை ஏற்றுமதி செய்வதற்கான நுழைவாயிலாக இஸ்ரேலை மாற்றும் நோக்கிலேயே அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் அதற்கு பாதுகாப்பை வழங்கி வருகின்றன. ஆனால், நமது பிராந்தியத்தின் எதிர்ப்பு சக்தி, இஸ்ரேலுக்கு எதிராக பின்வாங்காது.

அனைத்து முஸ்லிம் நாடுகளும் பாதுகாப்புக்காக ஒன்று பட வேண்டும். ஆப்கானிஸ்தானில் இருந்து ஏமன் வரை, ஈரானில் இருந்து காஸா மற்றும் லெபனான் வரை முஸ்லிம் நாடுகள் தற்காப்புக்காக தயாராக வேண்டும். இஸ்ரேலை எதிர்கொள்வதில் ஈரான் தாமதம் செய்யாது. அதேநேரத்தில், அது தனது கடமையை நிறைவேற்ற அவசரப்படாது. சில இரவுகளுக்கு முன்பு நமது ஆயுதப் படைகள் மேற்கொண்ட ஏவுகணை தாக்குதல் நடவடிக்கை என்பது முற்றிலும் சட்டபூர்வமானது.


லெபனான் மற்றும் பலஸ்தீன போராளிகள் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். நீங்கள் சிந்தும் இரத்தம், உங்கள் வலிமையை பலவீனப்படுத்தக் கூடாது. கடந்த ஆண்டு இதே நாளில் - ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்கு எதிராக ஹமாஸ் நடத்திய தாக்குதல் தர்க்க ரீதியிலானது மற்றும் சட்டபூர்வமானது. பலஸ்தீனியர்கள் செய்தது சரியானது"என்று ஐயத்துல்லா தெரிவித்தார். 5 ஆண்டுகளுக்குப் பிறகு மக்கள் முன்பு பொதுக் கூட்டம் ஒன்றில் பங்கேற்ற அவர் உரை நிகழ்த்தியிருப்பது கவனிக்கத்தக்கது. (எ)

# உலக கோடீஸ்வரர்களில் ஸுகர்பெர்க் 2ஆம் இடம்

நியூயோர்க், ஒக். 07

சொத்து மதிப்பில் அமேசான் நிறுவனத்தின் நிறுவனத் தலைவர் ஜெப் பிசோஸை முந்தியுள்ளார் மெட்டா (பேஸ்புக்) தலைமை அதிகாரி மார்க் ஸூகர்பெர்க். இதன் மூலம் தற்போது உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் அவர் இரண்டாம் இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

ப்ளூம்பெர்க் நிறுவனத்தின் தரவுகளின் படி தற்போது 206 பில்லியன் டொலர்களை நிகர சொத்து மதிப்பாக மார்க் ஸூகர் பெர்க் கொண்டுள்ளார். மெட்டாவின் ஏ ஐ சார்ந்த முதலீடுகள், நிறுவனத்தின் பங்குகள் ஏற்றம் கண்டது, செலவுகளை குறைக்கும் வகையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் போன்றவை இதற்கு காரணமாக அமைந்துள்ளன. இதன் மூலம் உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் அவர் இரண்டாம் இடத்துக்கு முன்னேறியுள்ளார்.



முதல் இடத்தில் உள்ள எக்ஸ் தள உரிமையாளர் எலான் மஸ்க் 256 பில்லியன் டொலர்களை சொத்து மதிப்பாக கொண்டுள்ளார். அவரை காட்டிலும் 50 பில்லியன் டொலர்கள் தான் மார்க் ஸூகர்பெர்க் பின்தங்கியுள்ளார். மூன்றாம் இடத்தில் உள்ள ஜெப் பிசோஸ் 205 பில்லியன் டொலர்களை சொத்து மதிப்பாக கொண்டுள்ளார். (எ)

# காஷ்மீர் மற்றும் ஹரியானாவில் காங்கிரஸ் கூட்டணிக்கு வாய்ப்பு

புதுடில்லி, ஒக். 10

ஜம்மு காஷ்மீர், ஹரியானா மாநிலங்களில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியமைக்க வாய்ப்பு உள்ளதாக தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் மொத்தம் 90 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. இந்தத் தொகுதிகளுக்கு செப்ரெம்பர் 18, 25, ஒக்ரோபர் 1 ஆகிய திகதிகளில் 3 கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது. காஷ்மீரில் தேசிய மாநாடு, காங்கிரஸ், தேசிய சிறுத்தைகள் கட்சி, மார்க்சிஸ்ட் ஆகியவை கூட்டணி அமைத்து போட்டியிட்டன. பா. ஜ. க., மக்கள் ஜனநாயக கட்சி ஆகியவை தனித்துப் போட்டியிட்டன. இதனால், அங்கு மும்முனைப் போட்டி நிலவுகிறது.

இந்தச் சூழலில் பல்வேறு ஊடகங்கள் தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பு முடிவுகளை வெளியிட்டன. இதன் படி காஷ்மீர், ஹரியானாவில் காங்கிரஸ் கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி

## இலங்கைக்கு 2ஆவது தோல்வி

ஷார்ஜா, ஒக். 07

இலங்கை - அவுஸ்திரேலியா மகளிர் அணிகள் இடையிலான போட்டியில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் ஷார்ஜா கிரிக்கெட் மைதானத்தில் சனிக்கிழமை நடைபெற்ற ஏ குழுவுக்கான ஐ. சி. சி. மகளிர் ரி - 20 உலகக் கிண்ணப் போட்டியில் நடப்பு சம்பியன் அவுஸ்திரேலியாவிடம் 6 விக்கெட்களால் தோல்வியடைந்த இலங்கை, முதல் சுற்றுடன் வெளியேறும் நிலையை எதிர்கொண்டுள்ளது.

ஏற்கனவே பாகிஸ்தானிடம் தோல்வியடைந்த இலங்கை, இவ்வருட மகளிர் ரி - 20 உலகக் கிண்ணப் போட்டியில் அடைந்த 2ஆவது தொடர்ச்சியான தோல்வி இதுவாகும்.

பாகிஸ்தானுடனான முதலாவது போட்டி போன்றே அவுஸ்திரேலியாவுடனான போட்டியிலும் இலங்கையின் துடுப்பாட்டம் சிறப்பாக அமையவில்லை.

இந்த இரண்டு போட்டிகளிலும் இலங்கை 100 ஓட்டங்களை எட்டத்தவறியது.

ஆஸியுடனான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த இலங்கை 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 93 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

ஆரம்ப வீராங்கனைகளான விஷ்மி குணரட்ன (0), அணித் தலைவி சமரி அத்தபத்து (3) ஆகிய இருவரும் முதல் 3 ஓவர்களுக்குள் ஆட்டமிழந்ததுடன் கவிஷா டில்ஹாரி (5) 7ஆவது ஓவரில் வெளியேறியமை இலங்கைக்கு பேரிடியைக் கொடுத்தது.

ஹர்ஷிதா சமரவிக்கிரமவும் நிலக்ஷிகா சில்வாவும் 4ஆவது விக்கெட்டில் 31 ஓட்டங்களைப் பகிர்ந்து இலங்கை அணிக்கு சிறு உற்சாகத்தைக் கொடுத்தனர்.

ஆனால், ஹர்ஷிதா ஆட்டமிழந்ததும் மேலும் 3 விக்கெட்கள் சீரான இடைவெளியில் வீழ்த்தப்பட்டன.

துடுப்பாட்டத்தில் நிலக்ஷிகா (29), ஹர்ஷிதா (23), அனுஷ்கா (16) ஆகிய மூவரே இரட்டை இலக்க எண்ணிக்கைகளைப் பெற்றனர்.

பந்துவீச்சில் மெகான் சூட் 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் சொபி மொலினொக்ஸ் 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.



94 ஓட்டங்கள் என்ற மிக இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 12. 2 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

அணித் தலைவி எலிசா ஹீலி (4), ஜோர்ஜியா வெயாஹாம் (3), எலிஸ் பெரி (17) ஆகிய மூவரும் ஆட்டமிழக்க 6ஆவது ஓவரில் அவுஸ்திரேலியாவின் மொத்த எண்ணிக்கை 35 ஓட்டங்களாக இருந்தது.

ஆனால், பெத் மூனி, ஏஷ்லி கார்ட்னர் (12) ஆகிய இருவரும் 4ஆவது விக்கெட்டில் 43 ஓட்டங்களைப் பகிர்ந்து அவுஸ்திரேலியாவின் வெற்றியை இலகுவாக்கினர்.

திறமையாகத் துடுப்பெடுத்தாடிய பெத் மூனி 43 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். அவரை விட எலிஸ் பெரி 17 ஓட்டங்களையும் ஏஷ்லி கார்ட்னர் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சுகந்திகா குமாரி 16 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் உதேஷிகா ப்ரபோதனி 19 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் இனோக்கா ரணவீர 20 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இந்த நிலையில் அவுஸ்திரேலியா 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (எ)



## 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது இங்கிலாந்து

ஷார்ஜா, ஒக். 07

இங்கிலாந்து - பங்களாதேஷ் மகளிர் அணிகளுக்கு இடையிலான போட்டியில் 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றது.

ஷார்ஜா கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பி குழுவுக்கான ஐ. சி. சி. மகளிர் ரி - 20 உலகக் கிண்ணப் போட்டியில் பங்களாதேஷிடம் சிறு சவாலை எதிர்கொண்ட இங்கிலாந்து இறுதியில் 21 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த இங்கிலாந்து 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றது.

இதுவரை நடைபெற்று முடிந்த 6 போட்டிகளில் நியூசிலாந்தைத் தவிர முதலில் துடுப்பெடுத்தாடிய வேறு எந்த அணியும் 120 ஓட்டங்களை எட்டவில்லை.

மாயா பௌச்சர், டெனி வியட் ஹொஜ் ஆகிய இருவரும் 48 ஓட்டங்களைப் பகிர்ந்து இங்கிலாந்துக்கு சிறந்த ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.

ஆனால், அதன் பின்னர் ஓட்ட வேகம் குறைந்தது. 12 ஓவர்கள் நிறைவில் இங்கிலாந்து 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆனால், அதன் பின்னர் பங்களாதேஷின் சவால் மிக்க பந்துவீச்சுக்கு மத்தியில் கடைசி 8 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து இங்கிலாந்தால் மேலதிகமாக 42 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

துடுப்பாட்டத்தில் டெனி வியட் ஹொஜ் 41 ஓட்டங்களையும் மாயா பௌச்சர் 23 ஓட்டங்களையும் அமி ஜோன்ஸ் ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாஹிமா காத்துன் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் ரிட்டு மோனி 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் நஹிதா அக்தர் 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 97 ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்தது.

பங்களாதேஷ் துடுப்பாட்டத்தில் இருவர் மாத்திரமே இரட்டை இலக்க எண்ணிக்கைகளைப் பெற்றனர்.

சோபனா மோஸ்தரி 44 ஓட்டங்களையும் அணித் தலைவி நிகார் சுல்தானா 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் லின்சி ஸ்மித் 11 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் சாலி டீன் 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். இறுதியில் 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. (எ)

சீன ஓபன் ரென்னிஸ் தொடர்

## அமெரிக்காவின் கோகோ காப் இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்




பீஜிங், ஒக். -07

சீன ஓபன் ரென்னிஸ் போட்டித் தொடரில் அமெரிக்க வீராங்கனை கோகோ காப் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

சீன ஓபன் சர்வதேச ரென்னிஸ் போட்டி பீஜிங் நகரில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன. இதில் ஓர் அரையிறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் கோகோ காப், ஸ்பெயினின் பவுலா படோசா ஆகியோர் மோதினர்.

இந்த ஆட்டத்தில் 4 - 6, 6 - 4, 6 - 2 என்ற செட் கணக்கில் பவுலா படோசாவை வீழ்த்தி கோகோ காப் இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். இதேவேளை, மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் செக் குடியரசின் கரோலினா முச்சோவா - சீனாவின் கின்வென் ஷெங் உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் ஆரம்பம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய கரோலினா முச்சோவா 6 - 3, 6 - 4 என்ற நேர் செட் கணக்கில் சீனாவின் கின்வென் ஷெங்கை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். இன்று நடைபெறும் இறுதிப்போட்டியில் கோகோ காப் - கரோலினா முச்சோவா ஆகியோர் மோதவுள்ளனர்.

## தென்னாபிரிக்கா அபாரம் மே. இ. தீவுகள் படுதோல்வி


டுபாய், ஒக். 07

மகளிர் ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் அணியை, தென்னாபிரிக்க அணி 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

டுபாயில் நடைபெற்ற லீக் போட்டி ஒன்றில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கு இந்திய தீவுகள் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 118 ஓட்டங்கள் எடுத்தது.

அந்த அணியில் அதிகபட்சமாக ஸ்டெ பானி ரெய்லர் 41 பந்துகளில் 44 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

தென்னாபிரிக்க வீராங்கனை மிலாபா 4 விக்கெட்களை கைப்பற்றினார். மரிஜான் காப் 2 விக்கெட்களை வீழ்த்தினார். பின்னர் 119 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென்னாபிரிக்க வீராங்கனைகள் களமிறங்கினர். தொடக்க வீராங்கனையாக களமிறங்கிய அணித் தலைவி லாரா வோல்வார்ட் 55 பந்துகளில் 59 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். மற்றொரு வீராங்கனை தாஸ்மின் பிரிட்ஸ் 52 பந்துகளில் 57 ஓட்டங்கள் சேர்த்து இறுதி வரை களத்தில் இருந்தார். இந்த நிலையில் 17. 5 ஓவர்களில் 119 ஓட்டங்கள் எடுத்த தென்னாபிரிக்க அணி 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. (எ)





## நியூசிலாந்து அணியிடம் இந்திய மகளிர் தோல்வி

டுபாய், ஒக். 07

ஐ. சி. சி. மகளிர் ரி - 20 கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடரில் 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணியை நியூசிலாந்து அணி வீழ்த்தியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி, 4 விக்கெட்கள் இழப்புக்கு160 ஓட்டங்கள் எடுத்தது. இந்த நிலையில் 161 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய இந்திய அணியினரால் 102 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது. இதனால் 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் அரசிலிருந்து...

இது தொடர்பில் அவர் விடுத்த அறிக்கையில்,

தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர் நியமனத்துக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தபோது அதில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் மற்றும் கொழும்பு வாழ் மக்களின் கோரிக்கைக்கு அமைவாக நான் விண்ணப்பத்தை கொடுத்திருந்தேன். அதனை எந்தவொரு காரணமும் இல்லாமல் சுமந்திரன் நிராகரித்துள்ளார்.

சுமந்திரன் தான் சார்ந்த அணியை வேட்பாளர் பட்டியலில் தெரிவு செய்து கட்சிக்காக தொடர்ச்சியாக பாடுபடுகின்ற மிக முக்கியமான திறமைசாலிகளை உள்ளெடுக்காததன் அடிப்படையிலும் தான் நியமிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்த மக்களுக்கு பொறுப்பு சொல்ல முடியாத கட்டத்தில் தான் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக அந்த அறிக்கையில் தவராசா குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## தாக்குதல்...

சென். செபஸ்தியார் தேவாலயத்தில் ஜனாதிபதி அநுரகுமார நேற்று சந்தித்தார். இந்த சந்திப்பில் பேராயரும் பங்கேற்றார்.

அவர் தனது உரையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தபோதும் அதற்கான நியாயம் கிடைக்கவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கங்களால் வசதிகள் செய்துகொடுக்கப்பட்டாலும் பிரச்னைக்கு காரணம் என்னவென்ற கேள்வி மக்கள் மத்தியில் உள்ளது.

இந்த நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கமீது நம்பிக்கை உள்ளது. அவரின் நேர்மையை பாராட்டுகிறேன். அந்த நேர்மையை மக்கள் மத்தியில் வலுப்படுத்தும் வகையில் ஜனாதிபதி செயல்படுவார் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறோம். இதன்படி, உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபட்டவர்களை சட்டத்தின் முன்நிறுத்துவார் என்று நம்பிக்கையும் கொண்டிருக்கிறோம் - என்றார். (ஐ)

## யாழ்ப்பாணத்தில்...

வேட்பாளர்கள் நிறுத்தப்பட வேண்டும். இதன்படி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், எம். ஏ. சுமந்திரன் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான கேசவன் சயந்தன், சந்திரலிங்கம் சுகிர்தன், இமானுவல் ஆனல்ட் மற்றும் சுரேகா சசீந்திரன், எஸ். சி. இளங்கோவன், கிருஷ்ணவேணி சிறீதரன், தியாகராஜா பிரகாஷ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு தேர்தல் மாவட்டம் 5 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டது. இங்கு, 8 வேட்பாளர்கள் நிறுத்தப்பட வேண்டும். எனினும், நேற்றுவரை 4 வேட்பாளர்களே இறுதி செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் முதல்வர் தியாகராஜா சரவணபவன், தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணித் தலைவர் கிருஷ்ணபிள்ளை சேயோன், மருத்துவர் சிறிநாத் ஆகியோர் முடிவாகியுள்ளனர்.

மீதமுள்ள 4 வேட்பாளர்களையும் மட்டக்களப்பு மாவட்ட கிளையுடன் கலந்துபேசி முடிவு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், வன்னி, அம்பாறை, திருகோணமலை தேர்தல் மாவட்டங்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் எவரும் இறுதி செய்யப்படவில்லை. எதிர்வரும் புதன்கிழமை நியமனக்குழு கூடி இந்த மாவட்டங்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் இறுதி செய்யப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அம்பாறையில்...

இந்தக் கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்கு அறிவிப்புகளை வெளியிட்ட சுமந்திரன்,

"சங்கு சின்னத்தில் போட்டியிடுவதற்கு அம்பாறை மாவட்ட குழு தீர்மானம் எடுக்கவில்லை. எனினும், தனித்துப் போட்டியிட வேண்டும் என்று அந்தக் குழு பொதுச் செயலாளரிடம் விடுத்த கோரிக்கையின் பிரகாரம் தமிழ் அரசுக் கட்சி தனித்து போட்டியிடும்.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் சின்னத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் இணைந்து போட்டியிடுவோம் - என்றார். (ஐ)

## சந்திரகுமாரின்...

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளில், கிளிநொச்சி தொகுதியில் சஜித் பிரேமதாஸ அதிக வாக்குகளை பெற்றிருந்தார்.

இந்த நிலையில், பாராளுமன்ற தேர்தலிலும் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இணைந்து போட்டியிட அந்தக் கட்சி முடிவு செய்துள்ளது.

இதன்படி, யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் மு. சந்திரகுமார் முதன்மை வேட்பாளராக போட்டியிடவுள்ளார். யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் சமத்துவக் கட்சிக்கு 5 வேட்பாளர்கள், ஐக்கிய மக்கள் சக்திக்கு 4 வேட்பாளர்கள் என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## பொதுத் தேர்தலில்...

அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், "தமிழ் மக்கள் பொதுச்சபை தன்னை போதியளவில் ஒழுங்கமைத்து வலுவூட்டி விரிவாக்குவதற்கு முன்னரேயே மிகக்குறுகிய காலத்தில் அறிவிக்கப்பட்ட ஜனாதிபதித் தேர்தலை ஈழத் தமிழ் மக்களை ஒருங்கிணைக்கும் பரீட்சார்த்தகளமாக கையாள்வதற்கு முன்வந்தது.

"இந்த முயற்சியில் வெற்றிபெற்றது மாத்திரமல்லாது ஒரு புதிய அரசியல் அணுகுமுறைகூடாக ஒருங்கிணைப்படும் மக்கள் எவ்வாறு தங்கள் ஒற்றுமையையும் திரட்சியையும் தேசமாக முன்நிறுத்தலாம் என்ற மாதிரியையும் உலகின் முன் துணிவுடன் காட்டியுள்ளது.

"ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் பொதுச் சபை ஒரு தேர்தலாகவோ, பதவிக்கான போட்டியிடலாகவோ கொண்டிருக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து சில நாட்களுக்குள் அறிவிக்கப்பட்ட பாராளுமன்றத் தேர்தல் பதவிகளுக்கான போட்டி அரசியலாகவும் மக்களை அரசியல் கட்சிகள் மற்றும் தனிநபர்கள் சார்ந்து கூறுபடுத்தி சிதறடிக்கும் செயல்பாடுகளை முதன்மையாக கொண்டுள்ளது என நாங்கள் அறிவோம்.

"இத்தகைய நிலையில் தமிழர் தரப்பு அரசியல் கட்சிகளை அவர்களின் இருப்புக்கான - பதவிக்கான நலன்களுக்கு அப்பால் அழைத்துச் சென்று தேசத்துக்கான ஒருங்கிணைக்க கால அவகாசமோ, சாத்தியமோ தமிழ் மக்கள் பொதுச்சபைக்கு தற்போதைய நிலையில் இல்லை.

"இதேவேளையில் பதவி நோக்கங்களுக்காக எதிரணியாக பிரிந்து நின்று மக்களின் ஒற்றுமையை சிதறடிக்கும் போட்டி அரசியலில் தமிழ் மக்கள் பொதுச்சபை வரித்துக் கொண்ட "தேசமாய் ஈழத்தமிழர்களை ஒன்றுதிரட்டுதல்" என்ற உன்னத குறிக்கோளுக்கு முற்றிலும் விரோதமானது என்பதனையும் மீண்டும் நினைவூட்டுகின்றோம்.

"இதனடிப்படையில் 2024 நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் பொதுச்சபை எந்தவொரு வகிபாகத்தையும் எடுப்பதில்லை என்று சனிக்கிழமை (05.10.2024) பொதுச்சபை கூட்டத்தில் தீர்மானித்துள்ளது" - என்றுள்ளது. (ஐ - 05)

## தந்தை...

இலங்கை தமிழ் அரசுக் கட்சி நேற்று யாழ். மாவட்டத்துக்கான வேட்பாளர் பட்டியலை அறிவித்தது. இதில், சட்டத்தரணி எஸ். சி. இளங்கோவன் இடம் பெற்றுள்ளார்.

இவர், தந்தை செல்வா என்று தமிழ் மக்களால் மதிப்பாக அழைக்கப்பட்ட எஸ். ஜே. வி. செல்வநாயகம் இரும்பு மனிதன் என்று அழைக்கப்பட்ட ஈ. எம். வி. நாகநாதன் ஆகியோரின் பேரனாவார்.

தந்தை செல்வாவின் மகனான சந்திரஹாசன், நாகநாதனின் மகளான நிர்மலா தம்பதியரின் மகனே இளங்கோ. இவர் சட்டத்தரணியாக பணியாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உள்நாட்டு...

காணப்படும் நிலைமை உலகின் ஏனைய பகுதிகளில் தாக்கத்தை செலுத் தக்கூடும் - குறிப்பாக தென்பகுதியில் என்றும் ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

உலக பொருளாதாரம் இன்று பல வீனமான நிலையில் உள்ளது. கடந்த ஐந்து வருடங்களில் மிக மோசமான நிலையை எதிர்கொண்ட உலகின் பல பகுதிகளுக்கு நான் சென்றுள்ளேன். இந்த நாடுகளில் வாழ்க்கை தர வீழ்ச்சியை மக்கள் எதிர்கொண்டுள்ளனர்.

நான் இலங்கைக்கு சென்றிருக்கின்றேன். நான் அங்கு அடிக்கடி செல்கின்றேன். அங்கு இடம்பெற்ற அரசியல் மாற்றங்களுக்குக் காரணம் என்னவென்றால், அவர்கள் எதிர்கொண்ட அரசியல் அதிர்ச்சியே. அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் காணப்பட்ட சில காரணிகளாலும் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத வெளி காரணிகளாலும் அவர்கள் இந்த நிலையை அனுபவித்தனர் - என்றார்.

உக்ரைனில் நாங்கள் பார்க்கின்றோம் - மத்திய கிழக்கில் நாங்கள் பார்க்கின்றோம். பூகோளமயப்படுத்தப்பட்ட உலகில் பதற்றங்களும் மோதல்களும் உலகின் ஏனைய பகுதிகளில் பிரச்னைகளை ஏற்படுத்தப்போகின்றன. ஒரு பிராந்தியத்தில் இல்லை எல்லாப் பக்கத்திலிருந்தும் அனைவருக்கும் இவை ஏதோ ஒரு வடிவத்தில் பாதிப்பை ஏற்படுத்தப்போகின்றன - என்றார். (ஐ)

## தமிழ் அரசு...

சந்தித்து கலந்துரையாடியமையை தொடர்ந்தே இந்த முடிவு எட்டப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் சார்பில் ஒரு பிரதிநிதியையே தெரிவு செய்யக்கூடிய நிலைமை உள்ளது. ஒன்றிணைந்து கேட்டால் மட்டுமே அதுவும் சாத்தியம். இந்த நிலையில், திருகோணமலை மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியையும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியையும் ஒன்றிணைத்து போட்டியிட செய்வது தொடர்பில் பேச்சுகள் நடைபெற்று வந்தன.

4 பாராளுமன்ற ஆசனங்களைக் கொண்ட திருகோணமலை மாவட்டத்தில் 7 வேட்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். இந்த நிலையில், தமிழ் அரசுக் கட்சி 5 வேட்பாளர்களையும் கூட்டணிக்கு 2 வேட்பாளர்களை ஒதுக்கவும் வலியுறுத்தியது.

தொடர்ந்து நடந்த பேச்சில் 4 வேட்பாளர்கள் தமிழ் அரசுக் கட்சிக்கும் 3 வேட்பாளர்கள் கூட்டணிக்கும் ஒதுக்குவது என்று தீர்மானிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் வீட்டு சின்னத்தில் இரு கட்சிகளும் கூட்டணியாக போட்டியிடவுள்ளன. (ஐ)

## உருளைக்கிழங்கு...

பெரிய வெங்காயத்துக்கான வரி 10 ரூபாயில் இருந்து 30 ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.

இதனால், உரு ளைக்கிழங்கு, வெங்காயத்தின் விலைகள் வரும் நாட்களில் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## சசிகலாவும்...

அவரின் உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று திங்கட்கிழமை வெளியாகலாம் என்று கூறப்படுகின்றது.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் சசிகலா ரவிராஜுக்கு வேட்பாளர் பட்டியலில் இடம் வழங்கப்படவில்லை. இது தொடர்பில் பலரும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இந்த நிலையில் தமிழ் அரசுக் கட்சியிலிருந்து கே. வி. தவராசா நேற்று விலகினார். இதேபோன்று, சசிகலா ரவிராஜும் கட்சியை விட்டு விலகவுள்ளார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## பாதிக்கப்பட்டவர்...

செலுத்திய ஜனாதிபதி அங்கிருந்தவர்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது, "இந்நாட்டில் அண்மைய காலத்தின் மிக மோசமாக அழிவு 2019 ஏப்ரல் 21 ஆம் திகதியே நிகழ்ந்தது. அந்த விடயங்கள் மண்ணுக்குள் புதையுண்டு அழிவதற்கு நான் ஒரு போதும் இடமளிக்கப்போவதில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தனக்கு வாக்களித்ததன் பின்னணியில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான நீதியும் நியாயமும் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் இருந்ததென நம்புகிறேன். மக்களின் நோக்கங்களும் எதிர்பார்ப்புக்களும் நான் கொண்டிருக்கும் நோக்கங்கள் மற்றும் எதிர்பார்ப்புக்களுக்கு மாறுபட்டவை அல்ல. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து மக்கள் எதிர்பார்க்கும் நீதியும் நியாயமும் நிலைநாட்டப்படும். அதற்கான முன்னெடுப்புகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பிலான முழுமையான முடிவுக்கு வந்து அந்த முடிவை அடிப்படையாகக் கொண்டு சாட்சிகளை திரட்டுவதால் மாத்திரம் இந்த விசாரணைகளை கொண்டு நடத்த முடியாது. வெளிப்படைத் தன்மையுடன் இந்த விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளேன்.

அரசியல் மாற்றத்துக்காக இந்த தாக்குதல் நிகழ்த்தப்பட்டதா என்ற கேள்வி மக்கள் மத்தியில் இருக்கிறது. அரசியலுக்காக நூற்றுக்கணக்கில் அப்பாவி உயிர்களை பலியிடுவது பெரும் அழிவாகும். அவ்வாறான நிலைப்பாடு நாட்டின் அரசியலுக்குள் காணப்படுமாயின் அந்த நிலைமையை முழுமையாக துடைத்தெறிய வேண்டும்.

இரண்டாவது விடயமாக அப்போதைய ஆட்சிப் பொறிமுறையும் இதனுடன் தொடர்புபட்டிருந்ததா என்ற சந்தேகமும் மக்கள் மத்தியில் நிலவுகிறது. அவ்வாறான நிலை மிகவும் பாதுகாப்பற்றதும் ஆபத்தானதுமான நிலை என்பதோடு, அதன்படி இதற்குள் நடந்தது என்னவென்பதை கண்டறிய வேண்டியது மிக அவசியமானது.

274இற்கும் மேற்பட்டவர்களின் உயிர்களை பறித்த மற்றும் பெருமளவானவர்கள் காயத்துக்கு உள்ளாக்கிய அழிவால் பாதிக்கப்பட்டவர்கள் தமது அன்புக்குரியவர்கள்மீது கொண்டிருக்கும் அன்புக்கான நீதியை நிலைநாட்ட வேண்டியது அவசியமாகும். அதேபோல் இவ்வாறான பிரச்னையால் ஏற்படக்கூடிய மிகப்பெரிய பாதிப்பிலிருந்து சமூகத்தை பாதுகாத்தமைக்காக மதகுருமார்களுக்கு மீண்டும் மீண்டும் நன்றி கூறுகிறேன் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

## தம்பதியர் சடலங்களாக மீட்பு

கொழும்பு, ஒக். 07

வீடு ஒன்றில் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த தம்பதியரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

களுத்துறை - வெலிபன்ன பிரதேசத்திலேயே இந்த சடலங்கள் மீட்கப்பட்டன.

அவர்களின் மரணத்துக்கான காரணம் தெரியவரவில்லை. சம்பவம் தொடர்பில் களுத்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 56 பாகிஸ்தானிய கைதிகள் நேற்று நாடு திரும்பினார்கள்

கொழும்பு, ஒக். 07

நாட்டில் பல வருடங்களாக சிறை வைக்கப்பட்டிருந்த பாகிஸ்தானை சேர்ந்த 56 கைதிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை வாடகை விமானம் மூலம் தமது நாடு திரும்பினர். கைதிகளை பாகிஸ்தானுக்கு அழைப்பதற்கான அனைத்து செலவுகளையும் அந்தநாட்டின் பிரபல வர்த்தகரும் மத்திய அமைச்சருமான அப்துல் அலீம் கான் தனிப்பட்ட முறையில் ஏற்றார் என்று கூறப்படுகின்றது.

அமைச்சர் அப்துல் அலீம் கானின் இந்த செயலுக்கு அந்நாட்டின் மத்திய உள்துறை அமைச்சர் மொஹ்சின் நக்வி நன்றி தெரிவித்தார்.

இந்த செயல்முறைக்கு ஒத்துழைத்த இலங்கை அரசாங்கத்துக்கும் உயர்ஸ்தானிகருக்கும் அவர் நன்றி தெரிவித்தார். (ஐ)

## சட்டவிரோத சிகரெட்களுடன் ஆணும் பெண்ணும் கைது!

கொழும்பு, ஒக். 07

அபுதாபியிலிருந்து இலங்கைக்கு சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட சிகரெட்களுடன் சந்தேக நபர்கள் இருவர் கட்டுநாயக்காவில் நேற்று கைதாகினர்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் நடத்திய சோதனையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதான இருவரும் களுத்துறையை சேர்ந்த 23 வயது பெண், 37 வயது ஆண் ஆவர்.

கைதான பெண்ணிடமிருந்து 24 ஆயிரத்து 200 சிகரெட்களும் மற்றையவரிடமிருந்து 24 ஆயிரத்து 600 சிகரெட்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

## ஐஸ் போதைப்பொருளுடன் தேராவிலில் ஒருவர் கைது!

முல்லைத்தீவு, ஒக். 07

ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவரை தாம் கைது செய்துள்ளனர் என்று புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசுவமடு - தேராவில் - தேக்கங்காடு பகுதியில் சட்டவிரோத செயல்பாடுகள் இடம்பெறுகின்றன என்று கிடைத்த தகவலை அடிப்படையாகக் கொண்டு குறித்த பகுதியை பொலிஸார் சுற்றி வளைத்தனர்.

இதன்போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 3 கிராம் 10 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள், 430 மில்லிகிராம் ஹெரோயின் என்பவற்றை பொலிஸார் கைப்பற்றினர்.

சந்தேகநபர் தேராவிலை சேர்ந்த 38 வயது நபராவார்.

## கனரக வாகனம் ட்ராக்டரை மோதியதில் ஒருவர் மரணம்

கல்முனை, ஒக். 07

ட்ராக்டரும் கனரக வாகனமும் மோதிய விபத்தில் ஒருவர் காயமடைந்தார். மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

கல்முனை - அம்பாறை வீதியில் சம்மாந்துறை பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்த விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அசனார் முகமட் இஸ்மாயில் (வயது 64) என்பவரே உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்து அம்பாறை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த மற்றும் காயமடைந்த நபர்கள் ட்ராக்டர் மூலம் வயலை உழுதுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றது.

கனரக வாகன சாரதியை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# அரசியல்வாதிகள் உட்பட 7 பேரின் சொத்துகளை முடக்க நடவடிக்கை!

கொழும்பு, ஒக். 07

**அரசியல்வாதிகள், இராணுவ மற்றும் அரச அதிகாரிகள் என 7 பேருக்கு சொந்தமான சொத்துகளை முடக்கும் நடவடிக்கைகளை இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.**

இதனால், இந்த 7 நபர்களும் தமது சொத்துகள், வங்கி கணக்குகள் மற்றும் காப்புறுதியை பயன்படுத்தவும் தடை விதிக்கப்படவுள்ளது.

அடையாளம் காணப்பட்ட 7 பேரும் தமது வருமானம் மூலம் சேர்க்க முடியாதளவு சொத்துகளை எவ்வாறு சேர்த்தனர் என்பது குறித்த புலனாய்வு சாத்துதல்களையும் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு செய்துள்ளது.

அத்துடன், இந்த சொத்துகள் தங்கள் குடும்பத்தவர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் மூலம் கிடைத்தன என்று இவர்கள் தெரிவித்திருப்பது பொய் என்பதும் விசாரணைகளில் வெளிவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு முகங்கொடுக்க இவர்கள் தயக்கம் காட்டுகின்றனர் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# விபத்துகளை குறைக்கும் நோக்கில் சாரதிகளுக்கு கொத்தமல்லி தேநீர்

கிளிநொச்சி, ஒக். 07

வீதிகளில் இடம்பெறும் வாகன விபத்துக்களை தவிர்க்கும் பொருட்டு கிளிநொச்சி போக்குவரத்து பொலிஸார் விசேட செயல்பாடொன்றை முன்னெடுத்துள்ளனர்.

இரவு நேரங்களில் வாகனங்களை செலுத்தும் சாரதிகளின் உறக்கத்தால் வீதி விபத்துகள் ஏற்படுவதுடன், இதனால் பல உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன. இவற்றைக் கருத்தில் கொண்டு கிளிநொச்சி வீதிப் போக்குவரத்து பொலிஸார், இரவு நேரங்களில் பயணிக்கும் வாகன சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு உறக்க நிலையை தணிக்க, கொத்தமல்லி கசாயம் வழங்கி வருகின்றனர்.

அந்த வகையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக வீதிப் போக்குவரத்து பொலிஸார் இவ்வாறான செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றமை நல்ல விடயம் என்று சாரதிகள் தங்கள் கருத்துக்களை பகிர்ந்துள்ளனர்.

கிளிநொச்சி வீதிப் போக்குவரத்து பொலிஸாரின் இந்தச் செயல்பாட்டுக்கு பலரும் தமது பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர். (எ)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# மறைக்கப்பட்ட விடயங்களை அரசாங்கம் வெளியிட வேண்டும்!

கொழும்பு, ஒக். 07

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் மறைக்கப்பட்டுள்ள விடயங்களை வெளியிடுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ள சமூக மற்றும் அமைதி மத்திய நிலையம், தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்வைத்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சமூக மற்றும் அமைதி மத்திய நிலையம் ஜனாதிபதி செயலகம் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு சென்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தீர்க்கப்படாத பல விடயங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்ட கடிதங்களை கையளித்திருந்தது.

இதன்போது அந்த அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் அருட்தந்தை றொஹான் டி சில்வா ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் துன்பியல் சம்பவம் எனவும் அதற்கு உரிய நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருந்தார். அத்துடன், அதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், எமது கடிதங்களையும் அவர்களிடம் ஒப்படைக்க தற்போது நடவடிக்கை எடுத்துள்ளோம். அதனை முறையாகவும் விரைவாகவும் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் மற்றும் அதன் பின்னர் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஆவணத்தையும் வழங்கியுள்ளோம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் மறைக்கப்பட்டுள்ள விடயங்களை வெளியிடுமாறு அன்று தொடக்கம் இன்று வரை தொடர்ச்சியாக போராடி வருகிறோம். தயவு செய்து இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய இணைப்புகளை வெளியிடுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுகிறோம்.

தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்வைத்த பரிந்துரைகள் பல உள்ளன. இந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறும் அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைக்கிறோம்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருந்தபோது சனல் 4 காணலி தொடர்பில் விசாரணை செய்ய குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

அந்தக் குழுவின் அறிக்கையே காணாமல் போயுள்ளதாக தகவல்கள் வெளியாகிருந்தன. வாக்கு மூலங்களும் காணாமல் போயுள்ளன. தற்போது பொறுப்பில் உள்ள ரவி செனவிரத்ன அதனை மீட்பார் என்று நாம் நம்புகிறோம் - என்றார். (ஐ)

# ஒரு கோடி ரூபாய் பெறுமதியான பீடி இலைகளுடன் ஒருவர் கைது!

சிலாபம், ஒக். 07

ஒரு கோடி ரூபாய்க்கு அதிக பெறுமதியுடைய பீடி இலைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை புத்தளம் - நுரைச்சோலை - இலந்தையடி கரையோரப் பகுதியில் பொலிஸார் நடத்திய சுற்றி வளைப்பில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் அறிய வருவதாவது,

2 ஆயிரத்து 500 கிலோ பீடி இலைகள் கடத்தப்படுவது தொடர்பில் அறிந்த பொலிஸார் நேற்றைய தினம் குறித்த பகுதியை சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.

இதன்போது, லொறி மற்றும் வானில் பீடி இலைகள் கடத்தப்பட்டன. குறித்த வாகனங்களை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர். இதனிடையே, வான், லொறியில் வந்தவர்கள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

எனினும், அவர்களில் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர். கைதானவர் கலேவெல பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் ஒரு கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியானவை என்று கூறப்படுகிறது.

பீடி இலைகள் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட லொறி, வான் என்பவை சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org